பக்கங்கள்-16 ஆனி,07.2015 விலை-30.00







# தினப்புயல்


நடுநிலை இதழ்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06








மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -124




## தமிழினத்திற்கு எதிராக நிழல் யுத்தம் புரிகிறதா? மைத்திரி அரசு



## நாடாளுமன்றத் தேர்தலும், அதன் குளறுபடிகளும்

## இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகளும், சாதக பாதகத் தன்மைகளும்






-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தமிழினத்திற்கெதிராக நிழல் யுத்தம் புரிகிறதா? மைத்திரி அரசு



இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தமிழர்களினதும், ஏனைய சிறுபான்மையினத்தவர்களினதும் உரிமைகளை நசுக்குவதாக சுயாதீன அறிக்கையொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஓக்லான்ட் நிறுவகம் மேற்கொண்டுள்ள இலங்கை குறித்த பல மாத ஆய்வின் முடிவிலேயே இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களின் பின்னரும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 160,000ற்கும் அதிகமான சிங்கள படையினரின் கடுமையான ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் ஈடுபட்ட விசாரணையாளர்கள் யுத்தத்திற்கு பின்னர் தமிழர் எதிர்கொள்ளும் விவகாரங்களை கையாள்வதற்கான அரசியல் உறுதிப்பாடு ஜனாதிபதி சிறிசேனவிடம் உள்ளதா? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

### யுத்தத்தின் நீண்ட நிழல்

யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் நீதிக்கான போராட்டம் என்ற இந்த அறிக்கை மூலமாக,

1.இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களின் பின்னரும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 160,000ற்கும் அதிகமான சிங்கள படையினரின் கடுமையான ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2.இராணுவம் பாரிய அளவிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆடம்பர உல்லாச விடுதிகளை நடத்துகின்றது, தமிழ்மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களில் பாரிய வர்த்தகநடவடிக்கைகளில்ஈடுபட்டுள்ளது, அதேவேளை ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு இராணுவத்தின் இந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கான வேறு வழிகளற்ற சாட்சியங்களாகவுள்ளனர்.

3.தமிழர் தாயகப்பகுதிகளில் இராணுவவெற்றிகளை குறிக்கும் நினைவுத்தூபிகளை அமைப்பதன் மூலமாகவும், பௌத்த ஆலயங்களை அமைப்பதன் மூலமாகவும் அரசாங்கம் தமிழ் கலாசாரம் மற்றும் வரலாற்றை திட்டமிட்ட முறையில் ஒடுக்க, அழிக்க முயல்கின்றது. இவை தமிழர் பகுதிகளில் சிங்களவர்களின் ஆதிக்கத்தை பறைசாற்றுகின்றன. இப்பகுதியில் சிறியளவிலான சிங்களவர்களே வாழ்வது குறிப்பிடத்தக்கது.

4.அரசாங்கம்உண்மைமற்றும்நல்லிணக்க முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ள போதிலும் யுத்தத்தின்போது காணாமற்போன ஆயிரக்கணக்கானவர்களின் நிலை என்னவென்று தெரியாத நிலையே காணப்படுகின்றது. 2012ஆம் ஆண்டு வெளியான ஐக்கியநாடுகள் அறிக்கை 70000பேர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கும் , அதேவேளை வேறு அறிக்கைகள் இதனைவிட இரண்டு மடங்கு அதிகமானவர்கள் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கின்றன.

நிலைமைகள் இவ்வாறிருக்க மாகாணசபைத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என நிறைவடைந்துள்ள இந்நிலையில் மற்றுமொரு பாராளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்து தேசிய அரசாங்கம் தம்மை பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் களமிறங்கியுள்ளது. தென்னிலங்கை சமூகத்தினர் தமிழ்மக்களுக்கான தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கு ஆயத்தமாகவில்லை. அத்தோடு சிங்கள இனவாதக்கட்சிகளும் தமிழ் மக்களை ஆதரித்து செயற்படக்கூடிய வாய்ப்புக்களில்லை.

மைத்திரியின் அரசு தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுத்தருவதாக கூறியிருக்கின்றது. அதற்காகவே ஜனாதிபதித்தேர்தலின் போது மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டது. அதில் கணிசமானளவு வேலைத்திட்டங்கள் மந்தகதியிலேயே இன்னமும் காணப்படுகின்றன. ஜனாதிபதி ஆட்சிபீடமேறிய 100 நாட்களுக்குள் அவர் கூறுகின்ற வாக்குறுதிகளை வழங்குவதென்பது திரைப்படத்திற்கு வேண்டுமென்றால் சாத்தியமாகும். நிஜத்தில் அவற்றை செயற்படுத்த இயலாது என்பதே உண்மை. குறிப்பாக வடகிழக்கு மக்களின் அபிலாசைகளை இந்த அரசாங்கம் பெற்றுக் கொள்ளவேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் போலியான வாக்குறுதிகளை வழங்கவேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இருக்கின்றது.

தென்னிலங்கைத் தலைவர்கள் எவருமே தமிழ்மக்களுக்காக குரல்வழங்கிய சரித்திரம் இல்லை. எமது உரிமைப்போராட்டத்தின் பங்கு என்ன? இதனால் தமிழ் மக்களுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைத்த அங்கீகாரம் என்ன? என்பவற்றை பார்க்கின்றபொழுது, இதற்குமாறான செயற்பாடுகளை கொண்டுசெல்லும் நோக்கிலேயே இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. சர்வதேச அரங்கில் நிழல் யுத்தம் என்பது நண்பர்களைப்போல பழகிக்கொண்டு, குறிப்பாகஎதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை பின்வாசலினால் சந்தித்து பேச்சுக்களை நடாத்தி, மக்கள் மத்தியில் ஒரு மாயையை உருவாக்குவதே ஒரு நிழல் யுத்த அரசியல் என்று கூறப்படுகின்றது.

விடுதலைப்புலிகளை அழித்துவிட்டோம் என மார்தட்டிக்கொள்ளும் இலங்கையரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை இதுவரை அகற்றாதது ஏன்? கைதுசெய்யப்பட்டோர் இதுவரை காலமும் விடுதலை செய்யப்படாதது ஏன்? தமிழ்க்கட்சி சார்ந்தவர்கள் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதையே அரசு எதிர்பார்க்கின்றது. டென்சில் கொப்பேகடுவா முதல் கோத்தபாய ராஜபக்ஷ வரை தமிழினத்தை கொன்றுகுவித்தார்கள். இதற்கு அக்காலத்தில் இருந்த அரசுகள் பக்கபலமாக இருந்தன.

சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் வழங்கப்பட்ட போதிலும் அவைகள் அனைத்தும் கண்துடைப்பாகவே இருந்தது. காலத்திற்குக்காலம் தமிழ் மக்களுடைய பிரச்சினையை திசைதிருப்பும் வகையில் அரசின் ஒட்டுக்குழுவாக செயற்பட்ட ஈ.பி.டி.பியினரைவலுவாகபயன்படுத்தியது. வித்தியாவின் வன்புணர்ச்சி சம்பவத்திற்கு முன்னர் 15 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால் இவைகள் ஒன்றும் வித்தியாவின் கொலையினைப் போன்று வெளிச்சம் போட்டுக்காட்டப்படவில்லை. ஆனால் இன்று இவ்விடயங்கள் தொடர்பாக சர்வதேச ரீதியாகவும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. செம்மணிப்புதைகுழி இடம்பெற்றபோது கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் போன்று வித்தியாவின் கொலையிலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குற்றவாளிகள் தப்பிச்செல்வதற்கு பொலிசாரே தடயங்களை அழித்தார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாதுபாராளுமன்றத்தேர்தல் நெருங்கியிருப்பதனால் தற்போதிருக்கக்கூடிய ஸ்திரமற்ற அரசாங்கம் தன்னை பலப்படுத்திக்கொள்வதற்கு இவ்வாறான கொலைச்சம்பவங்களை பெரிதுபடுத்தி, குறிப்பாக தமிழ் சமுதாயத்தினருக்கிடையில் பிரிவினைகளை உருவாக்கி அதில் குளிர்காய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது.

மைத்திரிபால சிறிசேனவின் யாழ் விஜயம் என்பதும் அவரது எதிர்கால அரசியலை நிர்ணயிப்பதற்கு அவர் எடுத்துள்ள ஒரு முயற்சி என்றும் கூறிக்கொள்ளலாம். தற்போதிருக்கக்கூடிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் இணைந்து பலசெயற்பாடுகளை செய்துவருகின்றது. வடகிழக்கு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அதில் அமைச்சுப்பதவிகளும் தமிழ் தரப்பிற்கு வழங்கப்பட்டமையினால் அரசுடன் கைகோர்த்து தமது செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அரசாங்கம் வடகிழக்கில் மாகாண சபைகளை பிரதிபலிக்கும் அமைச்சர்கள் பதவிக்கு ஆசைப்பட்டவர்கள். இவர்களுக்கு பதவிகளை வழங்கிவிட்டால் வாயினை அடைக்கமுடியும். இவர்களைக்கொண்டே இப்பகுதி மக்களை தமது வாக்குக்கேடயங்களாக பயன்படுத்த இயலும் என அரசு தீர்மானித்துள்ளது. ஆனால் தமிழ் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் த.தே.கூட்டமைப்பிற்கு வாக்களியுங்கள் எனத் தமிழ் மக்களுக்கு கூறியமையால் தான், இன்றுவரை கட்சி பேதங்களை மறந்து, தேசத்துரோகங்களில் ஈடுபட்ட இயக்கக்கட்சிகளையும் மறந்து, தமது வாக்குகளை வழங்குகின்றார்களே தவிர தமிழரசுக்கட்சி அல்லது ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் போன்ற கட்சிகளை நம்பி அல்ல என்பதை இவ்வரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசினால் தமிழ் மக்களுக்கெதிராக முன்னெடுக்கப்படும் நிழல் யுத்தம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை ஆய்வுசெய்து அதற்கான தீர்வுகளை முன்னெடுப்பதைவிடுத்து கொடுப்பதையெல்லாம் பெற்றுவிடுவதில் எவ்விதபயனும் இல்லை. 140,000இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கொலை செய்யப்பட்டபொழுது இவர்களையும் பயங்கரவாதிகள் என தீர்மானித்தது இந்த சிங்கள அரசு. தேசிய அரசிற்கு ஆதரவளிப்பதாக கூறிக்கொள்ளும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, இந்நாட்டில் விடுதலைக்காக போராடிய வீரர்களை கௌரவப்படுத்த எண்ணாமல் செயற்படுவது வருந்தத்தக்கது.

அன்று ஆயுதமேந்திப்போராடுவதற்கு தூண்டியவர்கள் தமிழ்க்காங்கிரஸ் மற்றும் தமிழரசுக்கட்சியினர்தான். இன்றுவரை இவர்களால் தமிழினத்திற்கு ஒரு விடுதலையை பெற்றுக்கொடுக்க இயலாத நிலைமை தோன்றியுள்ளது. ஆனால் அத்தனைக்கும்தீர்வுகண்டுதமிழ்மக்களது உரிமைகளை ஆயுதப்போரினால்தான் வென்றெடுக்கமுடியும் என்ற பிரபாகரனின் தாரக மந்திரமே தமிழ் மக்களுக்கு ஒரு அஸ்திவாரக்கல்லாக அமைந்திருக்கின்றது எனலாம்.

காலத்தின்தேவைகருதி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் தமிழ் மக்களின் நன்மைகருதியே என கூறப்பட்டுவருகின்றபோதிலும் தமிழரசுக்கட்சியை மிகைப்படுத்தியே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் ஒருபுறமிருக்க த.தே.கூட்டமைப்பினுடைய பதவி மோகங்களை உள் வாங்கிக்கொண்டுள்ள அரசாங்கம் இவர்களை எவ்வாறு கையாள்வது என நன்கு அறிந்துவைத்துள்ளனர். ஆயுதப்போராட்டம் இருந்த காலத்தில் மாற்று இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கி தமிழினத்தையே அழித்தொழித்த வரலாறு பதியப்பட்டிருக்கின்றது.

தற்பொழுதுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மாற்றுவழிகளை கையாள முனைந்தால் மீண்டும் ஒரு ஆயுதக் கலாசாரத்தை தற்போதிருக்கக்கூடிய அரசாங்கம் உருவாக்கும். விடுதலைப்புலிகளின் காலத்தில் ஸ்திரத்தன்மையோடு செயற்பட்டுவந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் பின்னடைவுக்குப்பின்னர் அதனது பலத்தினை தற்போது இழந்துள்ளது. தமிழ்மக்களுக்கான நிரந்தத் தீர்வுகள் எட்டப்படுகின்றபொழுது அதனை சீர்குலைக்கும் வகையில் கடந்த அரசு அமெரிக்கா, நோர்வே, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளுடன் இணைந்து சமாதானம் என்ற போர்வையில் நிழல் யுத்தம் புரிந்து விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சிதைவடையச்செய்தது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்பது சாத்தியப்படாததொன்று என்பதை சிங்கள அரசியல் தலைமைகள் நடைமுறைப்படுத்திவந்தன. அது இன்றுவரை தொடர்கின்றது.

மனிதாபிமானச் செயற்பாடுகள் என்று கூறிக்கொள்ளும் இலங்கையரசு குறிப்பாக வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள், காணாமற்போனோர் தொடர்பிலும் போராட்டங்கள் அல்லது அது தொடர்பாக தரவுகளை சேகரிப்பவர்களுக்கெதிராக தற்போதைய அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதனை கூட்டமைப்பிலுள்ளவர்களும், ஏனைய சமூக அமைப்புக்களும் இவற்றை வெளிக்கொணர தயக்கம் காட்டுகின்றனர். வீரவசனமும், அறிக்கைகளையும் வெளியிடுவதனால் பயன் இல்லை. நான்கு சுவர்களுக்குள் மாத்திரம் அவை அடங்கிப்போகின்றன.

குறிப்பாகச் சொல்லப்போனல் அரசாங்கத்திடம் இருந்து பணம் பெற்றுக்கொள்கின்றவர்களும், தமது பாராளுமன்ற இருப்பை இறுதிவரை பாதுகாத்துக்கொள்கின்றவர்களும் தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்று கூறிக்கொண்டு அரசுடன் பின்வாசல் உறவு கொண்டாடுபவர்களும், ஐ.தே.க வின் தமிழ் உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தமிழ் உறுப்பினர்களும், தமிழ் பேசும் மக்கள் என வரையறுக்கப்படும் முஸ்லீம் கட்சிகளும், மலையகம் சார்ந்த அரசியல் கட்சிகளும் தமிழினம் என்ற ஒரு குடையின் கீழ் வராதவரையிலும் இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இனிவரும் அரசுகளும் தமிழ் மக்களுக்கெதிராகநிழல்யுத்தம்ஒன்றினை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## சீரழிக்கப்படும் தமிழ் மக்களின் கலை, கலாசாரம்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களின் மரபுகள், கலை, கலாசாரம் பேணிப்பாதுகாக்கப்பட்டுவந்தன. அப்போது தமிழர் பிரதேசங்களில் ஒரு தவறான சம்பவம் இடம்பெற்றால் அதற்கான தண்டனை, ஏனையோர் மீண்டும் அந்த தவறினை செய்யமுடியாத அளவில் காணப்பட்டதை நாம் பாராட்டவேண்டும். இன்று தமிழரின் கலை, கலாசாரமானது மேற்கத்தேய நாடுகளை ஒத்த பாணியில் மாற்றம்பெற்று வருகிறது எனலாம்.

சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் ஆடை வடிவமைப்புக்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமையினால் ஆண்கள், பெண்கள் என தமது உடைகளை ஆபாசமாக அணிய ஆரம்பித்துவிட்டனர். மேற்கத்தேய நாடுகளில் ஆடல், பாடல் என்பன களியாட்ட நிகழ்வுகளாகும். அங்கு ஆடல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு, மசாஜ், பாலியல் தொழில்கள் என அரச அனுமதியுடன் நடாத்தப்படுகின்றது. தாய்லாந்தின் தேசிய வருமானத்தில் பாலியல்தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கையையும் இவ்வாறு மாற்றியமைப்பதே நோர்வேயின் திட்டமாக இருந்ததே தவிர, தமிழ் மக்களின் தியாகங்களுக்கு மதிப்பளித்து, விடுதலைப்புலிகள் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பதற்காகப் போராடினார்கள் என்ற உண்மை மறைக்கப்பட்டு தமிழர் பாரம்பரியங்களை சீர்குலைப்பதை நோக்காகக் கொண்டுசெயற்பட்டனர்.

அதன் பிரதிபலிப்பு இன்றுவரை தொடர்கின்றது. யுத்த காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தி இலங்கை இராணுவம் கொலை செய்தமை உண்மைதான். ஆனால் குறிப்பாக வடகிழக்கில் வாழ்கின்ற விதவைகளின் நிலை, அவர்களது வயிற்றுப்பிழைப்பு என்பன முறைகேடான கலாசாரத்திற்குள் அவர்களை தள்ளிவிட்டுள்ளது. இதுதொடர்பில் கருத்தடை செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக துல்லியமாக தகவல்களை சேகரித்தபோதிலும் அவைகள் அனைத்தும் மூடிமறைக்கப்பட்டே வருகின்றன. இவைபடிப்படியாக வளர்ச்சிபெற்று போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் செய்வதறியாது பாலியல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிவருகின்றனர்.

உலகில் மெக்சிக்கோ நகரமே போதைப்பொருள் வியாபாரத்தில் முதன்மை வகிக்கின்றது. அவ்வாறானதொரு நிலை வடகிழக்கில் தோற்றம்பெறுவதற்கு சிங்கள அரசு முயற்சிகளை மேற்கொள்கின்றதா? என்ற சந்தேகங்களும் வலுப்பெறுகின்றது. தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் போன்றவற்றில் இருந்த மூத்த அரசியல்வாதிகள் அனைவரும் சிங்கள அரசிற்கு எதிராக கடும்போக்கினை கடைப்பிடித்திருந்தால் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்திருக்காது. இன்று தொழில்நுட்ப ரீதியாக உலகம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இன்று தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம் அழியும் நிலையில் உள்ளது. நமது பாரம்பரியங்களைக் காப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதா? என்றால் அது மிகக்குறைவு. ஆன்மீக, கலை, கலாசாரம், இலக்கிய ரீதியாக மாணவர்களுக்கிடையே பயிற்சிகளை வழங்கி, நிகழ்ச்சிகளை உருவாக்கி, நாட்டுப்புற கலைகளையும் ஊக்குவிக்கமுன்வரவேண்டும். இதன்மூலம் வருங்கால சந்ததியினரை உன்னத நிலைக்கு கொண்டுசெல்லமுடியும். குறிப்பிட்ட ஒருசில தலைவர்களின் பின் த.தே.கூட்டமைப்பை வழிநடத்திச்செல்லவேண்டிய பாரிய பொறுப்பு எதிர்கால சந்ததியிடமே தங்கியுள்ளது. அவர்களை போதைப்பொருட்களுக்கு அடிமையாக்க மேற்கத்தேய, உள்நாட்டு அரசியல்வாதிகள் முனைப்புக்காட்டுகின்றனர். இதற்கு மாற்றீடாக த.தே.கூட்டமைப்பும், சமூக அமைப்புக்களும், தமிழ்த்தேசியவாதிகளும் இலங்கையில் வாழக்கூடிய தமிழினம் கலை, கலாசாரம் போன்ற நற்பண்புகளுடன் தொடர்ந்தும் வாழ அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இல்லையேல் தமிழ் இளைய சந்ததியினர் மாறுபட்ட கலாசாரங்களுக்குள் உள்வாங்கப்பட்டு, தமிழ்ச்சமுதாயமே அழிந்துபோகும் ஆபத்தான சூழ்நிலை உருவாகும்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

**49**

பயிற்சி எடுப்பதைவிட பயிற்சி கொடுப்பது கடினமான பணி. ஒவ்வொருபோராளிகளையும் நல்ல பயிற்சியாளர்களாக, தேர்ந்த சூட்டாளர்களாக மாற்றுவது பயிற்சியாசிரியரின் கையிலேயே உள்ளது. அந்தத் திறமை காவியாவிடம் இயல்பிலேயே இருந்தது. ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணியில் இருந்த எல்லோரையும் சிறந்த போர் வீரர்களாக காவியா உருவாக்கிவிட்டிருந்தார்.

களங்கள் மிக அகன்றதால் நான்கு முனைகளிலும் எங்களது நான்கு கொம்பனிகள் தமது வலுவுக்கும் அப்பாற்பட்ட பகுதிகளை நம்பிக்கையோடு பொறுப்பெடுத்து முன்னரங்கக் காவல்நிலைகளை அமைத்து நின்றது. மன்னாரில் நிற்கும் கொம்பனிக்கு ஒரு நெருக்கடி என்றால், உதவிக்கு ஆட்களை அனுப்பமுடியாத நிலையிலே மாங்குளத்துக் கொம்பனி நிற்கும். அது போலவே அம்பகாம், மணலாற்றுக் கொம்பனிகளும். ஏனெனில் ஒவ்வொரு கொம்பனியும் பொறுப்பெடுத்திருந்த தூரமும்எண்ணிலடங்காதது.வேறுயாரின் உதவியையும் எதிர்பார்த்திராமல் எமக்கு நாமேஉதவக்கூடியவகையில்உருவாக்கிய இந்த ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணி நெருக்கடிமிகுந்த இந்தக் காலகட்டத்தில் விதுஷா அவர்கள் எதிர்பார்த்தது போலவே தனது செயற்றிறன் மிக்க படையியல் பக்கபலத்தை, ஓய்வில்லாமல் களத்தில் நின்ற எங்களுடைய கொம்பனிகளுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தது. மணலாற்றில் கயல்விழியுடன் ஒரு அணி நின்ற அதேநேரம், மன்னாரில் சுதனியுடன் இவர்களின் இன்னோர் அணி நின்று வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட காவலரண்களைப் பொறுப்பெடுத்து அவற்றில்நின்றவர்களை இரண்டு நாட்களாவது ஓய்வெடுக்க வழிசெய்தது. கடைசியில் இவ்விரண்டு அணிகளுமே அம்பகாமப் பகுதியில் தொடர் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

முத்தையன்கட்டுக் குளக்கரையிலிருந்து கிட்டத்தட்ட ஒலுமடுவரையான தூரத்துக்கு ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியைப் பார்த்தவாறு அம்பகாமக் காட்டினுள் நாம் அரணமைத்திருந்தோம். காடு எமது வீடானது. அது நெடிதுயர்ந்த காடு. காட்டுக்கொடிகள் தேர்ந்த நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பின்னல்துணிபோல மரங்களை மூடியிருக்கும். மரங்களின் கீழே ஒன்று, ஒன்றரை அங்குல உயரத்தில் அழகிய புல் படர்ந்திருக்கும். கால் வைத்தால் மெத்து மெத்தென்றிருக்கும்.

இருந்திருந்தாற்போல் நீரோடி உலர்ந்த அருவிகள் வெள்ளை மணலோடு தோன்றும். காடுகளுள் மரங்களை முறித்து முறித்துப் போவதைவிட அருவிகளால் நடப்பது இலகுவாக இருக்கும்.

ஆரம்பத்தில் அங்கு ஜமுனாவுடன் 5.0 அணியினரே நின்றிருந்தனர். வெற்றி நிச்சயம் படை நகர்வால் மிகப்பெரிய போர் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாம் பகைவரை எதிர்கொள்ளவருமாறு எல்லோரையும் கேட்டோம். போராட்டத்திலிருந்து இயல்பு வாழ்வுக்குத் திரும்பியிருந்தோரையும் மீளவருமாறு கேட்டோம். முடிந்தளவு பலத்தைத் திரட்ட முடியுமானவரை முயன்றோம். எமது அழைப்பை ஏற்று 5.0 அணியாக வந்தவர்கள், காலையில் காவலரண்களுக்கு இடையே தேடல் நடவடிக்கையைச் செய்துகொண்டிருந்தார்கள்.

அன்று தேடுதல் அணியின் முன்னணியில் நகர்ந்துகொண்டிருந்த 2ஆம்.லெப்.நிஷாந்தி, படையினரின் பதுங்கித்தாக்கும் அணியினரைக் கண்டுவிட்டார். பின்னால் வந்த ஏனையவர்களுக்குச் சைகை காட்டிவிட்டு அடிக்கத்தொடங்கினார். பின்னால் வந்தவர்களும் அடிக்க, அதற்குள் கட்டளைப் பணியகத்தில் நின்ற மேஜர் சிவகுமாரி PK LMG உடன் அங்கிருந்து ஓடிவந்து அடிக்க படையினர் சுட்டுச்சுட்டுக்கொண்டே தமது பகுதியைநோக்கி ஓடிவிட்டனர். சுடுகலன்களைத் தன்கீழே வைத்துப்படுத்தவாறு வீரச்சாவடைந்த நிஷாந்தியின் நெஞ்சில் ஐந்து ரவைகள் பாய்ந்திருந்தன. இது நடந்தது 1999.06.08 இல்.

நிஷாந்தியைப்போலவே 2ஆம் லெப்.அத்தியரசியும். எம் அவசர அழைப்பை ஏற்று வந்தவர்தான். அன்று தேடுதல் அணி அத்தியரசியின் காப்பரணருகே தன்பணியை முடித்தது. அது இளம்பிறையின் பிளாட்டூன் நிலைகொண்டிருந்த இடம்.

இவர்கள் தேடுதல் பணியை முடித்தபோது அத்தியரசி காவற்கடமையில் நின்றார். தேடல் அணியைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு வேலைகளுக்கும் ஓய்வுக்குமாகத் தள்ளித் தள்ளிப்போய்விட, தனியாக நின்ற அத்தியரசி தனக்குப் பின்புறமாகப் போய்க்கொண்டிருந்த படையினரைக்கண்டுசுடத்தொடங்கினார். படையினரும் சுட ஆரம்பித்தனர். விலகிச் சென்றவர்களும் சுட்டவாறு ஓடி வந்தனர். எங்கோ வேலையாக நின்ற மேஜர் இளம்பிறைகூட சுட்டவாறு வந்துசேர்ந்துவிட்டார்.

எல்லாப்பக்கத்திலும் தமக்கு அடி விழத்தொடங்கியதும் படையினர் அத்தியரசி நின்ற திறந்த காப்பரணுக்கு மேலால் பாய்ந்து தமது பகுதியை நோக்கி ஓடத்தொடங்கினார்.

குறிப்பிட்ட நேரம்வரை ஒருவருமின்றித் தனியாக நின்று சண்டை பிடித்ததில் ரவைகள் முழுவதும் முடிவடைந்தநிலையில், தனக்குப்பின்புறம் நடந்துகொண்டிருந்த சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த அத்தியரசி, சண்டையை நிறுத்திவிட்டுப் படையினர் தன்னைநோக்கி ஓடிவரத் தொடங்க, தற்செயலாகவேனும் அவர்கள் தன்னைப் பிடித்துச்செல்லக்கூடிய வாய்ப்பைத் தவிர்ப்பதற்காகச் சயனைட்டை அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தேடுதல் அணியோடு வந்த ஒருவர் தனது சுடுகலனைக் காப்பரணருகே வைத்துவிட்டுச் சற்றுத் தள்ளிப்போயிருந்தார். அந்தச் சுடுகலனைப் படையினர் தூக்கிச் சென்றுவிட்டிருந்தனர்.



### எப்படி விடுவது?

ஒரு ரவை வீணாவதைக்கூட அனுமதிக்க முடியாத நெருக்கடியான காலம் அது. எமது தேவைகளை எவ்வளவு சுருக்கமுடியுமோ, அவ்வளவு சுருக்கி, மிக எளிமையாக வாழ்ந்துகொண்டிருந்த காலம் அது. மூன்று நேர உணவாகவுமே கஞ்சியும், சோறும், கத்தரிக்காய்க் கறியும் நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த நாட்கள் அவை. மூவருக்கு ஒரு பை என்ற அளவில் மெல்லிய பை ஒன்றில் வருகின்ற கஞ்சியை உணவு ஊர்தியிலிருந்து இறக்கி, காட்டுத்தடிகளை விலக்கியவாறு காப்பரண்களுக்குக் கொண்டுசெல்வதற்குள் பாதிப்பைகள் கிழிந்து கஞ்சி நிலத்தில் ஊற்றும். எஞ்சிய கஞ்சியைப் பகிர்ந்து உண்டோமே அன்றி, ஒருநாளும் மேலதிகமாக நாங்கள் கேட்டதில்லை.

எமக்குத் தரப்படுகின்ற சொற்ப அளவான சீனி முடிவடைந்தபின், பாலைப்பாணி, வீரப்பழப்பாணியுடன் சாயத் தண்ணீர் குடித்தோமேயன்றி அதற்குமேல் எதையும் நாம் எதிர்பார்க்கவில்லை. நீண்ட தூர நடை காரணமாக, தொடர்வேலை காரணமாக, பயிற்சி காரணமாக ஏற்படும் களைப்பைப் போக்குவதற்காக எஞ்சிய சோற்றைக் காயவைத்து வறுத்துப்பொடியாக்கி உண்டுகொண்டிருந்தோம்.

பயிற்சி நடவடிக்கையின்போதுகூட ரவைகளை எண்ணி எண்ணிச் சுட்டுக்கொண்டிருந்தோம். எப்படி ஒரு சுடுகலனைப் படையினர் எடுத்துச்செல்ல விடுவது?

கொம்பனி மேலாளர் தர்ஷா, கொம்பனிப் பொறுப்பாளர் பரா, பிளாட்டூன் பொறுப்பாளர் இளம்பிறை மூவரும் ஆளுக்கொரு திசையில் வேவுக்குப் புறப்பட்டனர். இவர்களுக்கு உதவியாகக் கயல்விழியும், சுதனியும் தமது அணிகளுடன் போயினர்.

எதிர்முன்னரங்கு பரபரப்பாக இருப்பது புரிந்ததால், என்ன நடக்கிறது என நிலைமை பார்க்கவும், எப்படியாவது ஒரு சுடுகலனை எடுத்துவரவுமென எம்மவர்கள் முன்னகர்ந்தனர். படையினரின் எல்லையை வெவ்வேறு இடங்களால் போய்ப்பார்த்து வந்தனர். எதிர் முன்னரங்கின் வெளிப்புற அமைப்பு ஓரளவு புரிந்துவிட்டது.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 319. | 2ம்.லெப்.ஜெயந்தா | முத்துலட்சுமி முத்தையா | திருகோணமலை | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 320. | 2ம்.லெப்.ராதை | ஈஸ்வரி வேலுப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 321. | 2ம்.லெப்.இளந்தளிர் | மேகலதா நாகேஸ் | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 322. | லெப்.ஆதி | உசாமலர் சிவராசா | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 326. | லெப்.சாமந்தி | செல்வமலர் தணிகாசலம் | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 327. | கப்டன்.சுதா | பாக்கியவதி நடேசன் | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |
| 328. | மேஜர்.பாலா/ஒளிநிலா | ரஜனி பாலசுப்ரமணியம் | யாழ்ப்பாணம் | 1997.12.04 | மன்னகுளம் ஜெயசிக்குறுய் |

# இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுமா?

இலங்கை இனப்பிரச்சினையானது நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வருவதும், பெருஞ்சாபக் கேடாக உள்ளதுமான பிரச்சினையாக விளங்குவதோடு., இப்பிரச்சினையானது உடனடியாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டியவொன்றெனத் தேச நலனிலும், தமிழ் மக்களின் நலனிலும் அக்கறை உள்ள எவருமே வலுயுறுத்த வேண்டியதொன்றாகவுள்ளது. இவ்விடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன் அவர்கள் "இலங்கையில் உள்ள இடதுசாரி அரசியல் தலைவர்கள், தற்போதைய அந்நாட்டின் அரசியல் கள அமைவில் 'தொழிலாளர் ஆட்சி' என்னும் வாய்பாட்டைக் கூறுவதைத் தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டுத் தற்போது நடைமுறையில் இருக்கும் அரச நிர்வாகக் கட்டமைப்புக்குள்ளேயே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குச் சிங்கள மக்களுக்குள்ளேயே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்" என ஆலோசனை வழங்கியமையைச் சுட்டிக்காட்டுவது சாலவும் பொருத்தமானதாக இருக்கும்.

தமிழகக்கம்யூனிஸ்ட்பிரமுகர் பாண்டியன் அவர்களுக்கு இலங்கை இனப்பிரச்சினை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியதொன்று என்னும் மிகவும் நல்லலெண்ணத்தோடு இயைந்த ஆத்ம வேட்கை இங்குள்ள இடதுசாரிகளுக்கு மட்டுமல்ல., தமிழ் மக்களிடம் வாக்குச் சேகரிப்பில் தமது வழமையான வெற்றியை நிலைநாட்டி வரும் தமிழ்த் தரப்பினருக்கும் கூட இல்லையென்றே கூறவேண்டும்.

அதற்குப் பதிலாகக் ஹெல உறுமய போன்ற சிங்களக் கடும் போக்கமைப்புக்களையும் அணைத்து வைத்துக்கொண்டு ஆட்சி செய்த மஹிந்த அரசில் மூன்று இடதுசாரிக் கட்சிகளும் பங்கேற்று அமைச்சர் பதவிகளையும் வகித்திருந்தார்கள். இந் நகர்வில் தமிழர் தரப்பு பிரதிநிதிகளின் நடவடிக்கைகளும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக வடமாகாண சபைக்கான தேர்தலில் முதல் அமைச்சர் வேட்பாளருக்கான தெரிவின்போது இடம்பெற்ற இழுபறியையும், அதன் பெறுபேறாக முதலமைச்சர் வேட்பாளராகக் கொழும்புக் கனவானும் ஒரு காலத்தில் தமிழர் உரிமை தொடர்பில் நீதிவானாக நின்று பின்னர் குத்துக்கரணம் அடித்தவரும், மஹிந்த அரசின் அமைச்சருமாக இருந்தவருமான வாசுதேவநாணயக்காரவின் சம்பந்தியுமான விக்கினேஸ்வரன் அவர்கள் நியமிக்கப்பட்டமையின் உள்ளார்ந்தந்தான் என்ன?

தமிழரசுக் கட்சியின் தொண்டராகத் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்துத், தமிழர் இளைஞர் பேரவையிலும் அங்கம் வகித்ததோடு, ' உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுடன் ஒன்றாகச் சிறையிருந்து இடர்ப்பட்ட மாவையாருக்கு வழங்கப்படும் முதலமைச்சர் வேட்பாளர் நியமனத் தெரிவு என்னும் தன்முனைப்பு சிதைக்கப்பட்டுக் கனவான் தெரிவு இடம் பெற்றமை யுத்தத்தின் பின்னர் இடம்பெறும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் சோர்வை உருவாக்குமென உணரப்படாமல்



போனமை தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்ந்தும் உக்கிரத்துடன் இடம்பெறுவதற்கே வழிவகுத்துள்ளது.

இலண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஒரே காலத்தில் கல்வி கற்ற திரு.S.W.R.D பண்டாரநாயக்கா அவர்களினாலும், S.J.V.செல்வநாயகம் அவர்களினாலும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை ஆரம்பத்திலேயே தீர்த்துவைத்து, அப்பிரச்சினை பூதாகாரமாகி நாட்டையே அதல பாதாளத்துக்குத் தள்ளி வைக்காமல் பாதுகாக்கும் முதல் முயற்சியே எவருமே எதிர்பாராத வகையில் பெரும் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இவ்விடத்தில், இத் தோல்விக்கான காரணிகள் ஆய்வுக்குட்படவேண்டியவையாக உள்ளன. இவ்வொப்பந்தத்தின் பின்னணியிலே, தென்னிலங்கையிலே பௌத்த குருமார்களினால் சிங்கள மக்கள் மத்தியிலே விதைத்த நச்சு விதைகள் தான் இன்று கிளைவிட்டுப் படர்ந்து பெரு விருட்சமாகி என்றைக்குமே இலங்கை அரசு அவ்வரசுக்குள் சிறுபான்மையாக வாழும் தமிழ் மக்களது உரிமைகளைக் கொடுக்கப்போவதில்லை என்னும் நிஜத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அதாவது எந்தவொரு அரசிடமிருந்தும் எதையுமே தமிழ் மக்கள் கேட்டுப் பெறமுடியாதென்னும் இயல்பு நிலை ஆழவேர்ஊன்றி நிற்கின்றது. ஆழவேர்ஊன்றி நிற்கும் இவ்வியல்பு நிலைக்கு வித்திட்ட பௌத்தபிக்குகள் 1958ல் மேற்கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் போது தென்னிந்தியத் தமிழ் மக்களின் குடிசனப் பரம்பலையும், கலை இலக்கியத்தின் செழுமையையும், குறிப்பாகச் சினிமாவின் வளர்ச்சியையும், திராவிடர் தமிழர் மரபுசார் மொழி இலக்கிய அறிவியல் வளத்தையும், அறிஞர் அண்ணா அவர்களின் அபாரமான திராவிட தனித்துவ எண்ணம் சார்ந்த எழுச்சியையும் சிங்கள மக்கள் மத்தியில் பூதாகாரமாகப் படம் பிடித்துக்காட்டி அர்த்தமற்ற பயப்பிராந்தியைக்கிளப்பிவிட்டதோடு பண்டா சிங்கள மக்களைச் செல்வநாயகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் விற்றுவிட்டாரென விசமப் பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்துவிட்டதனால் இனக்கலவரம் வெடித்ததோடு, பண்டா அவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வொப்பந்தத்தின் தோல்வி இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் நோக்கர்களையும், ஆய்வாளர்களையும் முற்றிலும் புதிய கோணத்தில் சிந்திக்க வைத்தது.

அச்சிந்தனையின் விரிவாக்கம் தான் இலங்கையில் கம்யூனிஸ்ட் ஆட்சி தவிர்ந்த எந்தவொரு முதலாளித்துவ ஆட்சியின் கீழும், தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கேட்டுப்பெறுவதோ, அல்லது அரசினதும் தமிழர் தரப்புத் தலைவர்களினதும் ஒப்பந்தங்களின் பாற்பட்டுப் பெறுவதோ ஒருபோதும் சாத்தியப்படாதென்னும் பேருண்மையாகும்.

இதனால் தான் 1965ல் பதவியேற்ற ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டு அவ்வரசாங்கத்தின் பிரதமரான டட்லி சேனநாயக்கா அவர்களுடன் இணைந்து டட்லி-செல்வா ஒப்பந்தம் என்னும் நடவடிக்கையை மேற்கொண்டபோது, அவ்வொப்பந்தம் தொடர்பில் செல்வா உட்பட எவருமே நம்பிக்கை வைத்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தொடர்ந்து 1966ல் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி உபயோகச் சட்டம் எதிர்த்தரப்பாளரின் ஆர்ப்பாட்டங்களினால் அமுலாக்கப்பட முடியாத நிலைக்கு ஆளானது. இவ்வார்ப்பாட்டங்களின் போது செங்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தமை இடதுசாரிக் கொள்கைவாதிகளையும் புதிய கோணத்தில் சிந்திக்கவைத்தது.

தொடர்ந்து இடம்பெற்ற காலநகர்வில் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தமிழீழம் என்னும் குறிக்கோளை முன்வைத்து 1977ல் இடம்பெற்ற தேர்தலின் போது அக்குறிக்கோளுக்கான ஆணையைத் தமிழ் மக்களிடம் இருந்து போதியளவு வெகுஜன பலத்துடன் பெற்றுக்கொண்டதமிழர்விடுதலைக் கூட்டணி வங்கச்சிங்கம் முஜிபர் வழி - அகிம்சா மூர்த்தி காந்தி வழி நின்று கர்மவீரர்கள் ஆகி ஆயுதம் தரித்த இளைஞர்களுக்கு துணைநின்று குறிக்கோளை வென்றெடுக்காமல் தமது வழமையான வர்க்க நலனின் பாற்பட்ட அரசியல் மனவோட்டத்தினால் தென்னிலங்கை முதலாளித்துவ சக்திகளோடும், சர்வதேச முதலாளித்துவ சக்திகளோடும் ஏகாதிபத்திய அமெரிக்காவுடனும் ஒட்டி உறவாடித் தமிழ் மக்களின் முதுகில் குத்தியதோடு, - அவர்களது விடுதலைப் போராட்டத்தை நகைப்புக்கிடமாக்கியதோடு, இளையோரது ஆத்ம தாகத்துக்குத் துரோகமும் இழைத்தார்கள்.

இந்நிலையில் இன்றைய பிரதான ஆதங்கம் இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுமா? என்பதாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு மூன்று வழிகளில் மட்டும் தான் எட்டப்பட முடியும். முதலாவது கொழும்பு அரசாங்கத்துடன் பேசுவது. இது பண்டா செல்வா ஒப்பந்தத்துடன் முற்றுப்புள்ளியான விடயம். தொடர்ந்து இடம்பெற்ற இத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகளின் தோல்விகள் இம்முற்றுப்புள்ளியை மேலும் வலுவாக்கி நிற்கின்றன. இரண்டாவது இடதுசாரிகளின் ஆட்சி அதிகாரம். இவ்விடயம் பற்றி இன்று எவருமே அலட்டிக்கொள்ள இயலாத அளவுக்குக் கள அமைவு என்றோ தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கொழும்பின் ஆட்சியாளர்களைத் தமது தாயகத்திலிருந்து வெளியேற்றித் தனி நாடமைக்கும் முயற்சி. இம் முயற்சியின் பாற்பட்ட முப்பது வருடகால யுத்தம் நமக்குக் கற்றுத் தந்த படிப்பினை என்ன?

எனவே, இனப் பிரச்சினைக்கான தீர்வு நாம் எட்டும் வீச்சைப் பொறுத்தே அமைந்துள்ளதெனலாம்.

**வீரப்பதி விநோதன்**

# நாடாளுமன்றத் தேர்தலும், அதன் குளறுபடிகளும்

ஆட்சி அதிகாரமானது கைமாற்றப்படுவதற்குப் பல்வேறு காரணிகள் சாதகமாக அமைந்திருந்தன. சிங்கள மக்களுக்குள் இருந்த கள நிலவரங்களை ஆராயும்போது சந்திரிக்காவினுடைய அரசியல் அமைவு, சரத்பொன்சேகாவின் நிலை, ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் அரசியல் அதிகாரங்களைப் பெறுவதற்கான தன்முனைப்பு, இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பியினரின் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்னும் தீவிரம் மிக்க செயற்பாடும், திடீர் பல்டியடித்து அமைச்சர் பதவியைத் துறந்து இஸ்லாமிய மக்களை மைத்திரிக்கு வாக்களிக்கும்படி கூறிய இஸ்லாமிய அமைச்சர், யுத்தக் குற்றவாளி என்னும் மஹிந்தவின் பிம்பத்தை வடக்கு கிழக்கின் தமிழ் மக்களுக்குக் காட்டித் தமது வழமையான பச்சை நலனின் பாற்பட்டு தமிழ் மக்களை மைத்திரிக்கு வாக்களிக்கும்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பார் கேட்டுக்கொண்டமை. (ஏனோ இவர்கள் மைத்திரியோ, அல்லது கொழும்பில் வேறு எந்த ஆட்சித் தலைவரோயுத்தக்குற்றவாளியாகும் நிலையிலும் தூய்மை காப்பார்கள் என எண்ணினார்களோ எனத் தெரியவில்லை. இது அவர்கள் பேசும் தமிழ்த்தேசியவாதத்துக்கு சமர்ப்பணமாக இருக்கட்டும்.) பச்சை நலனில் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் சிக்கவைத்துச் சிங்கார வாழ்வை மேற்கொள்ளும் மலையகத்தின் அமெரிக்க தாசர்கள் மலையகத் தமிழ் மக்களை மைத்திரிக்கு வாக்களிக்கும்படி பரிந்துரைத்தமை, விடுதலைப்புலிகளின் தோல்வியின் பின்னணியில் கொழும்பு, நீர்கொழும்பு, பாணந்துறை என்னும் மாவட்டங்களை உள்ளடக்கி மேலக மக்கள் முன்னணி என்னும் கட்சியை உருவாக்கிச் சினிமாக் கதாநாயகனாக முனைந்து, பின்னர் அக்கட்சியைக் கலைத்துவிட்டு புதிய கட்சி ஆரம்பித்து யூ.என்.பிக்கு மலையகத் தமிழ்ப் பாட்டாளிக் கண்ணின் மணிகளைத் தாரைவார்க்கும் தரங்கெட்ட அரசியலில் ஈடுபட்டிருக்கும் கொழும்பைப் பின்னணியாக வைத்து அரசியல் செய்துவரும் மலையக அரசியல்வாதியொருவரின் வேண்டுதல் ஆகிய காரணிகளே மஹிந்தவிலிருந்து மைத்திரிக்கு ஆட்சி கைமாற்றப்படுவதற்குச் சாதகமாக இருந்தவையாகும்.

தற்போது நூறு நாள் வேலைத்திட்டம் பிசுபிசுத்தமையும், அரசாங்க ஊழியர்களின் சம்பளம் தொடர்பிலான தேக்க நிலையும், வடக்கு உட்பட நாடு முழுவதும் வியாபித்துள்ள குற்றச் செயல்களும், சமூக விரோத நடவடிக்கைகளும், விரைவில் இடம்பெறவிருக்கும் நாடளுமன்றத் தேர்தலுக்குள் குளறுபடிகளை விதைக்கவல்ல பிரதான அம்சங்களாக உள்ளன. மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி நாட்டையும் தமிழ் மக்களையும் ஒரு சேரப் பாதுகாப்போமெனப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு மைத்திரி ஆட்சி பீடம் ஏறுவதற்கு உறுதுணையாக இருந்த ஜே.வி.பி மைத்திரியின் நிறைவேற்று அதிகார சபையிலும் பங்குபற்றியது. எனினும் தற்போது அக்கட்சி மைத்திரி அரசு மீது அதிருப்தி வெளியிட்டு வருகின்றது.

எனவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் குளறுபடிகள் இடம்பெறும்பொழுது ஜே.வி.பி யின் இந்நிலைப்பாடும் காரணமாக அமைந்துவிடும்.

அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் மஹிந்த தாசர்களாக இருந்து, மைத்திரி ஆட்சிபீடம் ஏறிய குறுகிய காலத்துக்குள்ளேயே கொடுக்க ஆரம்பித்திருந்த நெருக்குவாரம் படிப்படியாக அதிகரித்து வருவதும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை குளறுபடிகளாக்கும் சமிக்ஜைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மஹிந்த அரசில் பதவி சுகம் கண்ட லங்கா சமசமாஜக் கட்சியின் திஸ்ஸவிதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் டியூ.குணசேகரா, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவநாணயக்கார ஆகியோரும் அவ்வப்போது அரசை மிகைபடக் குறைகூறிவர ஆரம்பித்துள்ளார்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் மஹிந்த ஆட்சி பீடம் ஏறித் தாம் இழந்துவிட்ட அமைச்சுப்பதவிகளை மீளவும் பெற்றுவிடவேண்டும் என்னும் மனோபாவத்தினாலேயே இவர்கள் அரசின் மீது மிகைப்பட்ட அபாண்டங்களைச் சுமத்தி வருகின்றார்கள். இதனோர் அம்சமே வாசுதேவநாணயக்கார அவர்கள் - அண்மையில் நாடாளுமன்றத்துக்குள் தனது நீண்டகால அரசியல் பயணத்தின் பாற்பட்ட தைரியத்தினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் அநாகரிகமான நெறிநின்று மோதியுமுள்ளார். இவர்களோடு, ஜே.வி.பியில் இருந்து விலகிப் புதிய கட்சி ஆரம்பித்து மஹிந்த அரசாங்கத்தில் அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்ட விமல் வீரவன்ச அவர்கள் இணைந்து கொண்டமையும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் குளறுபடிகளைத் தோற்றுவிக்கும்.

வடக்கு கிழக்கு மக்களை மைத்திரிக்கு வாக்களிக்கும்படி கோரி அதில் வெற்றியும் பெற்றுவிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பார் இவ்வரசிலும் அதிருப்தி அடைந்துவிட்ட தமிழ் மக்களிடம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதைக்கூறி மீண்டும் அம் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறலாம் எனச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். 1965ல் ஐ.தே.கவின் அமைச்சரவையில் பங்குபற்றிய தமிழரசுக் கட்சியினர் 1970 தேர்தலை முன்னிறுத்தி 1969ல் திடீர் பல்டி ஒன்றை அடித்து அரசில் இருந்து வெளியேறியமை தெரிந்ததே. அதையொத்த பல்டி ஒன்றைத் தற்போதையைகள அமைவுக்கு ஏற்றவாறு மேற்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குள் குளறுபடிகளைத் தூவி நிற்பார்கள் என எண்ணுவதற்கு ஏதுநிலை உண்டு.

மேலும் மஹிந்த அரசில் அமைச்சராக இருந்து திடீர் பல்டி அடித்ததோடு அமைச்சுப் பதவியையும் துறந்து மைத்திரிக்கு ஆதரவாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, இஸ்லாமியர்களின் வாக்குகளை அவர்களுக்கு பெற்றுக்கொடுத்த இஸ்லாமிய அரசியல் தலைவரும் மீண்டும் இன்னொரு விதமாக பல்டி அடித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் குளறுபடிகளைத் தோற்றுவித்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

அத்தோடு மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து நேரத்துக்கு நேரம் - காலத்துக்குக் காலம் முற்றிலும் முரண்பாடான கருத்துக்களையும் - நடவடிக்கைகளையும் கூறியும், மேற்கொண்டும்வரும் மலையக அரசியல்வாதிகள் எந்த நேரத்தில் என்ன கூறுவார்கள், எந்நேரத்தில் யாது செய்வார்களென ஏனைய அரசியல்வாதிகள் தொடர்பில் ஆரூடம்கூறுவதுபோல் கூறுவதுமிகவும் கடினமானதே. ஏனெனில் மிகவும் பின்தங்கிய சீவனோபாயக் கட்டமைப்புகளைத் தம்மகத்தே கொண்ட மலையகத் தமிழ் மக்கள், ஏனைய மக்களைப் போல அரசியலில் ஓரளவேனும் ஆய்வுக் கண்ணோட்டத்தை செலுத்தும் நிலையில் இல்லாதுள்ளனர். இவ்வவலநிலையை, மலையக அரசியல்வாதிகள் அவ்வப்போது தமது பதவிப்பசிகளை ஆற்றிக் கொள்வதற்கும், பக்கற்றுக்களை நிரப்பிக்கொள்வதற்கும், வங்கிக் கணக்குகளை அதிகரிப்பதற்கும், தலைநகரிலும், தமிழகத்திலும் சொத்துச் சுகங்களை வியாபிப்பதற்கும் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இவர்களும் எதிர்பாராத நிலையில் குளறுபடிகளைத் தோற்றுவிக்கத்தான் செய்வார்கள் என அறுதியிட்டுக் கூறமுடியும்.



இறுதியாகக்கொள்கைஎதையுமே தம்மகத்தே கொண்டிராமல், சுயவாழ்வு கருதியும், தம்மோடு இணைந்தவர்களின் உயர்வை எண்ணியும், பச்சோந்தி அரசியல் செய்யும் ஈனப் பிறவிகள் இலங்கையில் சகல மக்கள் குழுமங்களுக்குள்ளும் அன்று தொட்டு இருந்து வருவதோடு இன்று என்றுமில்லாதவாறு இப்பிறவிகளின் எண்ணிக்கை அதிகரித்துமுள்ளது. எனவே இப் பிறவிகளின் திருகுதாளங்களும், தில்லுமுல்லுகளும், அட்டகாசங்களும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மேலும் ஒரு குளறுபடியைத் தோற்றுவிக்கத்தான் செய்யும்.

அத்தோடு, இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்த நாடு - மற்றைய இனத்தவர்கள் வந்தேறு குடிகள், சிங்கள பௌத்தர்கள் தென்னந்தோப்பைப்போன்றவர்கள். ஏனைய இனத்தவர்கள் அத் தென்னந்தோப்புக்குள் வளரும் செடிகள், புற்கள் போன்றவர்களென இனவாத விஷத்தைக் கக்கிவரும் கடும்போக்காளர்கள் தமிழர் விடயத்தில் மைத்திரியா, மஹிந்தவா தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னணி வகிப்பார்கள் எனத் தம்முடைய கழுகுக் கண்களைக் கூர்மைப்படுத்தி எந்நேரமும் காத்திருப்பதும், எதிர்வரும் நாடாளுமன்றத்திற்குள் விதைக்கப்படும் குளறுபடிகளுக்குள் ஓர் உச்சக்கட்ட அம்சமாக அமைந்துள்ளது.

**வீரப்பதி விநோதன்**

# இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகளும், சாதக பாதகத் தன்மைகளும்



பொதுவாக முழு நாட்டினதும் பொருளாதார நெருக்கடியும், சிறப்பாக நாட்டில்புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன. நாட்டில் இடம்பெறும் பொருளாதார நெருக்கடி, தேசிய இனப் பிரச்சினையின் பாற்பட்ட முரண்பாடுகள், மோதல்கள் ஆகியவற்றின் வீச்சின் பாற்பட்டே பெருமளவில் இடம்பெறுகின்றன என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் இனநெருக்கடி தொடர்பில் சர்வதேச நாடுகள் தலையிடுவது முழு இலங்கையினதும் தமிழினத்தினதும் நலன்கள் சார்ந்தவையா? அல்லது தமது நலன்கள் சார்ந்தவையா? என ஆய்வு செய்யின் அவற்றின் தலையீடுகள் பிரதானமாகத் தமது நலன்களை முன்னிறுத்தியே இடம்பெறுகின்றன எனத்தான் கூறவேண்டும். எனினும் அவற்றின் இவ்வாறான தலையீடுகள் சில பொழுதுகளில் நாட்டிற்குச் சாதகமான தன்மைகளையும் தோற்றுவிக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக இலங்கையின் இனநெருக்கடியானது நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்துகொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் கூட்டுச் சேர்ந்த ஐக்கிய முன்னணி அரசினதும் வித்தியாசப்பட்ட அணுகு முறைகளினால் நாட்டுக்குள்ளும் சர்வதேச அளவிலும் வித்தியாசமான வேறுபாடான தாக்கங்களை உருவாக்கி வந்துள்ளது.

எடுத்துக்காட்டாக ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியானது, மிக அதிகளவில் அமெரிக்கா சார்பாக விளங்கி வருவது கண்கூடு. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியும், அதனோடு இணையும் இடதுசாரிகளின் கூட்டமைவு ஆட்சியும் அடிப்படையில் இத்தன்மையை விட்டுக்கொடுக்க முடியாதநிலையில் விளங்கினாலுங்கூட உள்ளூர் மட்ட நடவடிக்கைகள் தொடர்பில் முற்போக்கு சோசலிச நகர்வை மேற்கொண்டு ஏகாதிபத்தியப் பிடியின் வலுவை குறைந்த வீச்சில் கொண்டவையாகவும் விளங்கி வந்திருக்கின்றன. எனினும் இனப்பிரச்சினை தொடர்பில், ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பின்னர் உருவாக்கப்பட்ட இலங்கைத்தமிழரசுக் கட்சி ஆகியன தமது பிரதேசத்தின் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆங்கிலப் புலமை சார்ந்த மேட்டுக் குடியினரின் நாளாந்த நலனின் பாற்பட்டு முழு இனத்தினதும் மனிதம், சுயமரியாதை, அரசியல் விடுதலை ஆகியவற்றையும் சீர்தூக்கிப்பார்த்து அவற்றின் வழிதமது நடவடிக்கைகளை முன்னெடுத்தமை - சர்வதேசப் பார்வையில் இலங்கைத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அடக்குமுறையில் சுகம் காணும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேசர்கள் என்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தின. இதன் ஆதாரங்களாகப் Federal Party - சமஷ்டிக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் முரண்நிலைகளையும், 1965ல் ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியில் பங்குபற்றி அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டமையும், பின்னர் , 1977ல் பெற்ற தமிழீழத்திற்கான மக்கள் ஆணையையும் கூசாமல் காட்டிக்கொடுத்து ஜே.ஆர், பிரேமதாசா - ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் நேசர்களாக மாறி அமெரிக்க நாட்டின் ராஜதந்திரிகளை ஒரே நாட்டின் பிரதமர் - ஒரே நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்னும் தலைக்கனம் தலைதெறிக்கக், கைலாகு கொடுத்து நாட்டுக்குள் வரவேற்றுத், தமிழ் இளையோரை வெறுப்படைய வைத்தமையையும், மனித விடுதலையொன்றையே, நலிவடைந்தோரின் நல்வாழ்வு ஒன்றையே தமது அந்தராத்மாவின் துடிப்பாகக்கொண்ட சர்வதேச முகாம் - இவர்களா தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்றுக்கொடுக்கப் போகின்றார்களா? எனச் சந்தேகத்துடன் நோக்க வைத்தமையையும் முன்வைக்கலாம்.

வடக்கின் தமிழத் தலைமை ஆரம்பகாலத்தில் இருந்து இன்றுவரை தமிழர் மனிதம் தொடர்பிலும் அரசியல், சுதந்திரம், கல்வி, வேலைவாய்ப்பு, ஏனைய சீவனோபாயத் தேவைகள் தொடர்பிலும் இலங்கையில் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி நலன் சார்ந்தும் உலகளாவிய அளவில் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்கள் சார்பிலும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தமையே அவர்கள் இதுவரையில் எதையுமே சாதிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்ததோடு, ஆயுதப் போராட்டத்தையும் கேள்விக் குறியாக்கியது. அது மட்டுமல்லாது உரிமை மறுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்நடவடிக்கைகள் உலகமயமாக்கல் என்னும் தனது புதிய பொருளாதாரக் கொள்கையை உலகமெல்லாம் பரவவிட்டு முழு உலகத்தையுமே கபளீகரம் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் அமெரிக்காவின் வெறிபிடித்த



இரத்தப்பசிக்கு இலங்கையையும் பலியிடுவதற்குத் தான் வித்திட்டிருக்கின்றன.

இந்திய மேலாதிக்கவாதிகளினதும் - அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களினதும் உள்ளூர்ச் சுரண்டலாளர்களினதும் கோரப் பசிக்குத் தீனி போடுவதற்குத் தமிழர் பிரச்சினையைச் சாதகமாக வைத்துத் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் - தொடர்ந்தும் வேகமுடன் முன்வருவது, தமக்கும் உள்ளூர்ச் சுரண்டலாளர்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் அனுகூலம் உண்டு என்னும் கள அமைவே தவிர வேறல்ல. இக்கண்கொண்டு நோக்கின் - சுரண்டலாளர்களினதும் - மேட்டுக் குடியினரதும் சுகபோக வாழ்வு ஒன்றை மட்டும் தான் சாதகமான நிலையொன்றை இலங்கையின் சர்வதேச நாடுகளின் தலையீடு தோற்றுவித்துள்ளது என்பதற்கு எடுகோளாகக் கொள்ளமுடியும். வெகுஜனத் திரட்சியின் பாற்பட்டுச் சிந்திப்பின் வீட்டுத்திட்டம் உட்பட இன்னோரன்ன உதிரித்திட்டங்கள் தவிர்ந்த எவையுமே சாதகமானவையல்ல.

பொதுவில் தேசத்தின் அனைத்து இனக் குழுமங்களினதும் வெகுஜனத் திரட்சி இலங்கை இனப் பிரச்சினையைச் சாதகமாக வைத்து மேற்கொள்ளப்படும் சர்வதேசத் தலையீடுகளினால் பெரிதும் பாதகமான விளைவுகளையே எதிர்கொள்ளும்.

இந்நிலை நீடிக்குமாயின், இலங்கை மற்றொரு வியட்நாமாகி இலங்கையின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் மூலதனப் பாய்ச்சலினால் வெறும் பொம்மை அரசியல் நிர்வாகிகள் ஆக்கப்பட்டுச் சகல இலங்கை மக்கள் குழுமங்களும் அமெரிக்காவின் கொடிய பொருளாதார சுரண்டல்களுக்கும் - ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்திற்கும் ஆட்பட்டு அவலப்பட்டு வாழவேண்டிய அபாக்கியமான நிலையொன்று உருவாகும்.

அத்தோடு - இந்தியமேலாதிக்கவாதிகளின் தலையீடு தமிழக ஆட்சித் தலைவர்களும் அதற்குச் சாதகமாக அமைந்துவிடின் - தமிழர் நலன் சார்ந்த நடிப்பொன்றை மூலதனமாக வைத்து இலங்கை தேசத்தில் தமது மேலாதிக்கத்தைச் செலுத்த முன்வருவர் என்பதில் ஐயமில்லை.

தமது தேசத்திலேயே ஆரியர் - திராவிடர் என்னும். குரோதம் உருவாகுவதற்கு ஆரம்பத்திலேயே வித்திட்டு, தேசத்தைச் சின்னாபின்னமாக்கிக் காந்திதேசமே உனக்கு காவலில்லையா? இது தானா காந்தியார் பெற்றுத்தந்த சுதந்திரம்? என ஏக்கத்தோடு ஏங்கவைத்த பாரதத்தின் ஆளுவோர் இலங்கையில் தலையிடுவது சாதகமான உதிரி அனுகூலங்களை அளிக்குமேயொழிய - நிச்சயமாக மிகப்பாதகமான - பெரும்போக்கான பிரதிகூலங்களையே அளிக்கும்.

-கருணைக்கண்ணன்-

## ஜோன் கெரியின் இலங்கைப் பயணமும், வெளிவராத உண்மைகளும்...

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

கிரனெடா, பனாமா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளை ஆக்கிரமிக்க இதேவகையான தந்திரோபாயத்தைப் பயன்படுத்தியது. இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதல் சீனா, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரதான வியாபாரப் பங்காளர்களாக அமெரிக்காவைப் பிரதியீடு செய்தது. சில ஆபிரிக்க நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் சீனா அமெரிக்காவைப் பிரதியீடு செய்தது.

2008ஆம் ஆண்டில் அமெரிக்காவின் உள்ளேயே தெளிவாகத் தெரிந்த பொருளாதார நெருக்கடி அமெரிக்காவின் பல்தேசிய நிறுவனங்களுக்கான பொருளாதாரக்கொள்கை குறித்து மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியது. உள்நாட்டிலேயே பல போராட்டங்கள் எழுந்தன. இவற்றின் மத்தியில் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு அமெரிக்க அரச செலவீனத்தின் ஒரு பகுதியைத் தின்றுகொண்டிருந்தது. ஆப்கானிஸ்தானை முற்றாகச் சுரண்டி அழிக்கமுடியாமல் எதிர்ப்புப் போராட்டங்கள் முடுக்கிவிடப்பட்டன. இந்த நிலையில் அமெரிக்காவின் ‘கடைக்கண் பார்வை’ ஆசிய நாடுகள் மீது விழுந்தது.

இதற்காக அவர்கள் மிட்டெடுத்துப் பலப்படுத்திய இராணுவ ஆக்கிரமிப்பு அலகே ஆசிய பசுபிக் கட்டளையகம். 1947ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க அரசின் யுத்தப்பிரிவான இந்த அணிக்கு இப்போதெல்லாம் மனிதாபிமானம் மட்டுமே பிறக்கிறது. ஹிலாரி கூறுவது போன்று ஆசிய பசுபிக் பிராந்தியம் அமெரிக்க ஆக்கிரமிப்பின் மையப்புள்ளி என்றால் அதன் தெற்காசியப் பிராந்தியத்தின் தளமாகப் பயன்படுவது இலங்கை. ஆசியப் பிராந்திய ஆக்கிரமிப்பிற்கு அமெரிக்காவின் தந்திரோபாயம் வேறுபட்டது.

**1. முதலில் சிக்கலுக்குரிய பாசிச அரசுகளைத் தோற்றுவிப்பது.**

**2. அச்சிக்கல்களைத் தீர்ப்பதாகக் கூறி அரசுகளை மிரட்டியோ அன்றி வேறு வழிகளிலோ இராணுவ ஆக்கிரமிப்பையும் பிரசன்னத்தையும் உறுதிப்படுத்துவது.**

இந்த நடவடிக்கைகளுக்காக ஏனைய நாடுகளையும் அமெரிக்க அரசு பயன்படுத்துவதைக் காணலாம். இந்த வகையில் ராஜபக்ஷ கிரிமினல் அரசு அமெரிக்க அரச ஆக்கிரமிப்பிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது. உள்நாட்டின் இனப்படுகொலையை எந்த எதிர்ப்புமின்றி அமெரிக்க ஆதரவோடு கனகச்சிதமாக நடத்திமுடித்த இலங்கை அரச படைகள் தெற்காசியாவில் அமெரிக்க அரசின் நெருக்கமான நண்பர்கள். முதலில் இனப்படுகொலையைப் போர்க்குற்றமாக மாற்றிய அமெரிக்க அரசு மிக நீண்ட காலத்திற்கு ராஜபக்ஷ அரசுகுறித்த அழுத்தங்கள் உலகின் எந்த மூலையிலும் இருந்து எழாதவாறு பாதுகாத்தது. மக்கள் மத்தியிலிருந்து எழக்கூடிய கொந்தளிப்பை ஒடுக்குவதற்காகத் தானே இலங்கை அரசைத் தண்டிக்கப்போவதாகப் படம் காட்டியது. அமெரிக்க அடியாள் படையான ஐக்கிய நாடுகள் சபையும், புலம்பெயர் கூலிகளும், தமிழ் நாட்டின் இனவாதிகளும் அமெரிக்காவின் இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் துணைபோயினர்.

தொடரும்...

மறவன்

# தமிழ் மக்களுக்கான தீர்வில் இனவாதக்கட்சிகளின் போக்கு



1958ல் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் செல்வ நாயகத்துடன் ஒப்பந்தம் செய்த பண்டாரநாயக்கதென்னிலங்கையில் வீசிய ஒப்பந்தத்திற்கு எதிரான புயலுக்கு ஈடுகொடுக்க முடியாமலும் -அரசியலில் தன்னை தக்கவைத்துக் கொள்வதற்கு, வேறு வழியேதும் தெரியாதநிலையிலும்தான் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவேனென யாருமே எதிர்பார்க்காத இனவாத அரசியல் எண்ணக்கருவை ஆரம்பித்து வைத்தார். இவ்வெண்ணக் கருவானது பண்டாரநாயக்கா அவர்களின் அந்தரங்க சுத்தியுடன் இயைந்த ஒன்றாக இல்லாதிருந்தபோதும் அவர் அப்படியொரு நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதே உண்மையாகும்.

இவ்விடத்தில் சிங்கள மக்களுக்குள் வாக்கு வேட்டையாடிய அரசியல் கட்சிகளுக்குள் ஆட்சிக்கு வரக்கூடியளவில் சிங்கள மக்களுடைய வாக்குகளைச் சேகரிக்கக்கூடிய இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளுமே ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இனவாதக் கட்சிகளாகவே இருந்து வந்தன, இருந்து வருகின்றன. அக்கட்சிகள் இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு இனவாதம் பேசியே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்கவேண்டிய பரிதாபமான நிலையை, உள்ளூர் மட்டத்தில் உல்லாசமாக இருந்து கொண்டு சொகுசு வாழ்க்கையை மேற்கொள்வதற்குப் புத்தரின் பேராலும் பௌத்த தர்மத்தைப் பாதுகாப்புக் கவசமாகக் கொண்டும் இனவாதம் பேசுவது இலகுவான வழி என இனங்கண்ட பௌத்த பிக்குகளும், உள்ளூர் நிலச்சுவாந்தர்களும், உள்ளூர் மூலதனம் கொண்டவர்களுமே தோற்றுவித்தார்கள். UNP, SLFP ஆகியவற்றின் ஆதரவாளர்களான கல்வியாளர்களும், நல்லெண்ணம், நீதி, நியாயம் என்பவற்றைத் தம்மகத்தே கொண்டவர்களும், மேற்தரப்பட்ட முத்தரப்பினரின் பொருளாதார, சமூக அந்தஸ்தினால் ஓரம் கட்டப்பட்டதோடு, அவர்களும் அவர்கள் விதைத்த இனவாதமற்ற நல்லெண்ணத்தின்பாற்பட்ட சிந்தனைகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

அரசியல் , ரீதியாக இச் சாபக்கேட்டை எதிர்த்து நிற்கக் கூடிய தொழிலாளர் ஆட்சி என்னும் கோட்பாட்டைத் தம்மகத்தே கொண்ட இடதுசாரிக்கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஆரம்பத்தில் சிங்கள மக்களுக்குள் இனவாதத்தை எதிர்த்தும், தமது கட்சிகளின் அரசியல் சுபாவத்திற்கு ஏற்றவாறும் மிகத் தீவிரமாக வேலைசெய்தபோதும், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இனவாதத்தை மூலதனமாகவைத்துத்தமதுஉள்ளூர் உல்லாச வாழ்க்கையைக் கச்சிதமாக மேற்கொண்ட முத்தரப்பினராலும் இக்கட்சிகளின் தலைவர்களும், தொண்டர்களும், ஆதரவாளர்களும், பல இன்னல்களுக்கு ஆளாகினர்.

சமூகச் செல்வாக்கு மிக்க இம் முத்தரப்பினராலும் ஏவிவிடப்பட்ட சிங்களக் காடையர் இட்துசாரிக் கட்சிகளினால் சிங்கள மக்களுக்குள் முன்னெடுக்கப்பட்ட சிங்கள தமிழ் உரிமை சார்ந்த கருத்தரங்குகளையும், பொதுக் கூட்டங்களையும் குழப்பியடித்துக் களேபரத்தை உருவாக்கினார்கள். இடதுசாரி எண்ணக் கருத்துக்களைக் கொண்ட படைப்பாளிகளும், கலைஞர்களும் இம் முத்தரப்பினரதும் சமூகச் செல்வாக்கினால் ஓரங் கட்டப்பட்டதோடு, பல் வேறுபட்ட இடர்கள் இன்னல் களுக்கும் ஆளாகினார்கள். இதனால் மனச்சோர்வடைந்த இடதுசாரி அரசியல் தலைவர்களும், தொண்டர்களும், ஆதரவாளர்களும், இலக்கிய கர்த்தாக்களும், கலைஞர்களும் தமது தீவிரமான சிங்கள தமிழ் சம அந்தஸ்துத் தொடர்பான அரசியல் நகர்த்தல்களின் வலுவைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர்.

இது இவ்வாறு இருக்கத் தென்னிலங்கையின் இனவாதத்துக்கு எதிராக இனவாதப் போக்குடைய அரசியல் கட்சிகளே வடக்கிலும்ஸ்தாபிக்கப்பட்டன. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்என்னும்கட்சிதமிழ் மக்களின் மனிதம், சுயமரியாதை, அரசியல் உரிமை, என்பவற்றைக் கருப் பொருட்களாகக்கொண்டு தனது நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் கூட இக்கட்சி சிங்கள முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் இலங்கையின் முதலாளித்துவ நலனின் பாற்பட்ட வேலைத் திட்டங்களுக்கு நாடாளுமன்றத்துக்குள் நேசக்கரம் நீட்டியமையினால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை இலங்கை முதலாளித்துவ. நலனுக்குள்ளும், சர்வதேச முதலாளித்துவ நலனுக்குள்ளும் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடிக்குள்ளும் சிக்குண்டு சீரழிய வேண்டிய நிலை உருவானது.

சட்டப்புலமை பெற்ற ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஐ.நாவில் அமரிக்கையாக இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைக் காவிச் சென்று மணிக்கணக்காக மூச்சுவிடாமல் முழங்கித் தள்ளியபோதும் அம் முழக்கமானது அவருடைய அசாதாரண புலமையைப் பறைசாற்றியதேயொழிய, தமிழ் மக்களின் அவல வாழ்வின் அகல்வுக்கு ஒரு சிறுதளவேனும் உறுதுணையாக இல்லாமல் போனமைக்கும் இக்கட்சியானது தமிழர் பிரச்சினையை ஏகாதிபத்திய வலைக்குள் சிக்கவைத்தமையே காரணமாக இருந்தது. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தோடு கருத்து முரண்பாடுகொண்டு 1949ல் எஸ்.ஜே. வி.செல்வநாயகம், கு.வன்னிய சிங்கம், ஈ.எம்.வீ. நாகநாதன் ஆகியோர் இலங்கைத்தமிழரசுக்கட்சிஎன வடக்கிலும், Federal party சமஷ்டிக் கட்சி என்னும் பெயரில் கொழும்பில் ஆங்கிலப் புலமையாளர்கள் மத்தியிலும், சட்ட வல்லுனர்கள் மத்தியிலும் முரண்நிலை அரசியல் செய்து, சட்டமறுப்புப் போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள் என்பவற்றையும் முன்னெடுத்து ஜீ.ஜீ. பொன்னம்பலத்தையும், அவரது கட்சியையும் ஓரங்கட்டியபோதும் கூட அவர்கள் எந்த ஏகாதிபத்திய முதலாளித்துவ வலைக்குள் தமிழர் பிரச்சினைகளைச் சிக்கவைத்துச் சீரழித்துச் சின்னாபின்ன மாக்கினரோ, அதையேதான் இலங்கைத்தமிழரசுக் கட்சியினரும் கைக்கொண்டு அதே ஏகாதிபத்திய முதலாளித்துவ வலைக்குள் தமிழர் பிரச்சினையைச் சிக்கவைத்துச் சீரழித்தார்கள்.

இவ்விடத்தில் பிரதானமாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். தென்னிலங்கையின் இனவாதப் போக்குஐக்கியதேசியக்கட்சி(UNP), சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகிய இரு கட்சிகளையும் பதவியில் அமர்த்தியபோது முதலாளித்துவ விழுமியங்களைத் தன்னகத்தே அதிகளவு கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியோடு நட்புக் கரம் நீட்டுவதில் வடக்கின் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்த தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் முனைப்பு பெற்றிருந்தமையை நோக்கர்கள் பலரும் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். தென்னிலங்கையின் இனவாதப் போக்குடைய கட்சிகளுக்கு எதிராக வடக்கில் தமிழர்களை அடையாளப்படுத்தக்கூடிய கட்சிகள் உருவாக்கப்பட்டமையில் தவறேதும் இல்லை. ஏனெனில் தென்னிலங்கையில் இனவாதப் போக்குடைய கட்சிகளினால் மட்டும் தான் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்ததென்னும் இயல்புநிலையை இக்கட்டுரையில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால் இக்கட்சிகள் இலங்கைத் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் தமிழர் பிரச்சினையை இலங்கை இனவாத போக்குடைய முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் வலைகளுக்குள் சிக்கவைத்துச் சீரழித்தமையும் அதன் எச்ச சொச்சமாக நீண்டகாலமாகத் தொடர்ச்சியாக இருந்து வந்த இச்சாபக்கேட்டின் காரணமாக ஆயுதப்போராட்டமும் அவ்வலைக்குள் அகப்பட்டுத் தடம்புரண்டமையும், நல்ல உள்ளங்களின் உள்ளீர்ப்பில் தாங்கொணாத் துயரத்தைக் கொணர்ந்தது.

மேலும் தமிழ் மக்களுக்கான தீர்வில் இனவாதப் போக்குடைய இலங்கையின் ஆளுங்கட்சிகள், தமிழர்களை அடையாளப்படுத்தும் தமிழ்க்கட்சிகளின் வர்க்க நலனை, இன அடக்கு முறையையும், புறக்கணிப்பையும், இனச் சுத்திகரிப்பையும், கச்சிதமாகக் கையாள்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்துவதை ஒரு போதும் தவறவிட்டது கிடையாது. தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாண ஆங்கிலப் புலமைசார் மேட்டுக்குடி மக்களின் அன்றாட இடையூறற்றவாழ்க்கையை மட்டும் முன்னிலைப்படுத்திக் கிழக்கு இலங்கை மக்களின் குடியேற்ற வாழ்க்கை (Colony Life) தொடர்பிலும், மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை தொடர்பிலும் பாராமுகமாக இருந்தமையிலிருந்தே, அவர்களினால் தமது கட்சிகளுக்கென அடையாளப் படுத்தப்பட்ட குறியீடுகள் போலியானவை எனவும், அவர்கள் இப்போலியான குறியீடுகளை வைத்துக் கொண்டு தென்னிலங்கையின் முதலாளித்துவ சக்திகள் வீசிய மாயவலைகளுக்குள் தமிழர் பிரச்சினையைச் சிக்கவைத்துத் தம் வர்க்க நலனைப் பேணினார்கள் என்பதுவே உண்மையெனவும், இம்மாயவலையின் சமகால எச்சமாகக் கொழும்புக் கனவானும், நீண்டகாலமாக இடதுசாரி கொள்கைவாதியாகவும், அண்மைக் காலமாக இனவாதியாகவும் மாறிவிட்ட வாசுதேவநாணயக்கார அவர்களின் சம்பந்தியுமான விக்கினேஸ்வரன் அவர்களினதும் எதிர்கட்சித் தலைவர் பதவிக்காக எஞ்சியுள்ள தமிழர் சுய மரியாதையையும் விற்பதற்குத் தயார் நிலையில் உள்ள சம்பந்தன் அவர்களினதும் இவர்களோடு இன்று வடக்கின் வர்க்க நலனின் பாற்பட்ட பச்சைச் சேலையினதும் இணைவையும் குறிப்பிடலாம்.

**கருணைக் கண்ணன்**

# பிராந்தியச் செய்திகள்

## சொந்த மண்ணுக்கு திரும்பிய பூரிப்பில் வசாவிளான் மக்கள்



யாழ்.வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக, 25 வருடங்களுக்கு பின்னர் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்கள் தங்கள் சொந்த மண்ணுக்குதிரும்பியபூரிப்பில்மகிழ்வோடு பூசை வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வசாவிளான் தெற்கு பகுதி கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த ஞானவைரவர் ஆலயமும் கடந்த பல வருடங்களாக பராமரிக்கப்படாமல் உள்ளது.

இந்நிலையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் குறித்த ஆலயத்திற்கு வருவதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் வருகை தந்து அனுமதி மறுக்கப்பட்டமையினால் திரும்பியிருந்தனர்.

இதனையடுத்து வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் யாழ்.மாவட்ட படைத்தளபதி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தின்படி மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் காடுகளாக மாறியிருக்கும் தங்கள் வீடுகளைமக்கள் கண்ணீருடன் ஆவலாக பார்வையிட்டனர். இந்நிலையில் தமது சொந்த நிலங்களில் விரைவாக மீள்குடியேற வேண்டும் இதற்காகவே இந்த நாளில் பொங்கல் நடத்துகின்றோம். நீண்ட நாட்களுக்கு பின்னர் சொந்த மண்ணுக்கு திரும்பியது சந்தோஷம் என மக்கள் கூறிக்கொண்டனர்.

## ஹற்றனில் வீதி விபத்தில் மயிரிழையில் உயிர் தப்பிய ஒருவர்



நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கார் ஒன்று ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் மல்லியப்பு பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளார். மாலை 3.30 மணியளவில் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நால்வர் பயணித்த இந்த காரில் ஒருவர் காயமடைந்துள்ளார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீதி வழுக்கியதன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த கார் சேதங்களுக்குள்ளாகியுள்ளதுடன், காயமடைந்தவர் சிறுகாயத்துடன் மயிரிழையில் தப்பியுள்ளார்.

மலையகத்தில் தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையின் காரணமாக பனிமூட்டம் அதிகரிப்பதாகவும், அடைமழை காரணமாக வீதி வழுக்கும் தன்மையுடையதுமாக காணப்படுகின்றது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் வாகன சாரதிகள் மிகவும் அவதானத்துடன் பயணிக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## வீதி இன்றித் தவிக்கும் கருங்காலித் தாழ்வு கிராம மக்கள்



மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குள பிரதேசத்தில் வயல் வெளிகளின் நடுவே உள்ள ஒரு கிராமமே கருங்காலித் தாழ்வு கிராமம் ஆகும். இங்கு 34 குடும்பங்கள் வாழ்கின்றனர். அவர்களில் தற்சமயம் 13 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் மூலம் வீடுகட்டவும் அனுமதி வந்துள்ளது. இருப்பினும் பாதை சீரின்மையால் வீடு கட்டுவதற்குரிய கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்வதற்கு குறித்த 13 குடும்பங்களும் செய்வதறியாது தவித்து வருகின்றனர்.

மேற்படி கிராமத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர், வைத்திய கலாநிதி சி. சிவமோகன் அவர்கள் அக்கிராமத்திற் நேரடியாக சென்று பார்வையிட்ட பொழுது அக்கிராம மக்கள் தாங்கள் பலகாலங்களாய் எமது சொந்த காணிகளுக்கு பாதை இல்லாததால் செல்லவில்லை எனவும் தமக்கான வீட்டுத் திட்டம் வந்திருந்தபோதும் பாதை ஒன்று இல்லாததால் தமது வீட்டுத் திட்டம் கூட ரத்து செய்யப்பட்டு விடுமோ என ஐயம் தெரிவித்தனர். அதற்கு அவர் பதிலளிக்கையில் தனக்குரிய வருடாந்த நிதியில் இப்பாதை புனரமைப்பு வேலையை தற்காலிகமாக செய்து தர நடவடிக்கை எடுப்பதாகவும் நிரந்தரமாக திருத்த வடமாகண சபையினூடாக தெரியப்படுத்தி முயற்சி எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையில் உயர்வு



கொழும்பு நகரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக கொழும்புமாநகர சபை அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் கொழும்பு நகரத்தில் உள்ள வீடுகளை பரிசோதனை செய்து, டெங்கு அபாய பகுதிகளை கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வருடத்தில் மாத்திரம் 1300 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மஸ்கெலிய தோட்டத்தில் இடம்பெற்ற மருத்துவமுகாமின் போது...









தகவல் :- செ.பெருமாள், மஸ்கெலியா

## இரத்தினபுரி விபத்தில் நான்கு பேர் பலி

இரத்தினபுரி எஹலியகொட பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் நான்கு பேர் பலியாகினர். இந்த சம்பவம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. பயணிகள் பஸ் ஒன்று முச்சக்கர வண்டியுடன் மோதியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அனர்த்தத்தின்போது முச்சக்கர வண்டியில் சென்றவர்களே பலியாகினர்.

## மாயமான பொலிஸ் ஒருவரின் ஆவணங்கள் கண்டுபிடிப்பு

2012ம் ஆண்டு முதல் காணாமல் போன பொலிஸ் கொன்ஸ்டபிள் எழுதிய இறுதிக்கடிதம் கிடைத்துள்ளது. இந்த கடிதத்தின் மூலம், அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாமென்ற வலுவான ஐயம் ஏற்பட்டுள்ளது. ஒஹியா வனப்பகுதியில் சில தினங்களின் முன்னர் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. ரோந்து சென்ற வனபரிபாலன அதிகாரிகள் எச்சங்களை கண்டு, பொலிசாரிற்கு அறிவித்திருந்தனர். பொலிசார் நடத்திய சோதனையில், அந்த மனித எச்சங்கள் காணாமல் போன பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரது என்பது தெரிய வந்தது. வவுனியா- செட்டிக்குளம் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தநிலையில் இவர் காணாமல் போயிருந்தார்.

இவரது எச்சத்திற்கு அருகில் பையொன்று கண்டெடுக்கப்பட்டது, அதில் காவல்துறை அடையாளஅட்டை, பற்தூரிகை, ஆடைகள் என்பன கண்டெடுக்கப்பட்டன. அத்துடன், உயிரிழந்தவர் இறுதியாக எழுதியதென சந்தேகிக்கப்படும் கடிதமொன்றும் கிடைத்துள்ளது. தனது உடலை கண்டெடுப்பவர்கள் அதுபற்றி பொலிசாரிற்கு அறிவிக்கும்படியும், தனது கையடக்கத் தொலைபேசியை தனது மூத்தமகளிற்கு வழங்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவற்றினடிப்படையில், இதுவொரு தற்கொலையாக இருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர்.

## பெண்களுக்கெதிராகத் தொடரும் வன்முறைகள்...

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் கணவன்மாரால் தாக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வரும் மனைவிமார்களின் தொகை வெகுவாக அதிகரித்துக்கொண்டு வருவது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. வைத்தியசாலை தரவுகள், பொலிஸ்முறைப்பாடுகள் அடங்கலாக ஆதாரபூர்வ தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தன்னார்வ நிறுவனங்கள் சில நடத்திய ஆய்வில் இந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ்பிரிவிற்குள் உள்ளடங்கும் கோறளைப்பற்று தெற்கு(கிரான்), கோறளைப்பற்று மத்தி (வாழைச்சேனை-முஸ்லிம்), கோறளைப்பற்று (வாழைச்சேனை -தமிழ்), கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) ஆகிய பிரதேச செயலகப்பிரிவிலேயே இச் சம்பவங்கள் நடந்தேறிவருவது கண்டறியப்பட்டுள்ளன. பொதுவாக இப்பிரதேச செயலகப்பிரிவுகளில் அடங்கும் எல்லைக் கிராமங்களான காவத்தமுனை,பாலைக்காட்டுவெட்டை, ரிதிதென்ன, ஜெயந்தியாய,மாஞ்சோலை, செம்மணோடை, பிறைந்துரைச்சேனை, கல்குடா, புதுக்குடியிருப்பு, சுங்காங்கேணி, கருவாக்கேணி, வாகனேரி, மினுமினுத்தவெளி போன்ற பகுதிகளிலேயே இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுவருகின்றது.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகள், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் பாதிப்புக்குள்ளான மனைவிமாரின் வாக்குமூலங்கள், மத்தியஸ்த சபைக்கு வருகின்ற முறைப்பாடுகள், ஆலய மற்றும் பள்ளிவாயல் தர்ம கர்தாக்களிடம் வந்து சேருகின்ற முறைப்பாடுகள், நீதிமன்றங்களுக்கு வரும் விசாரணைகளை அடிப்படையாக வைத்து சில தன்னார்வ அமைப்புக்கள் இந்த தரவுகளை தொகுத்துள்ளன.

வறுமை, காணிப்பிரச்சினை, சொத்துப் பங்கீடுகளில் உள்ள பிரச்சினைகள், இரண்டாம் தார திருமண வாழ்க்கைகளினால் ஏற்படுகின்ற குழப்பங்கள், கள்ளத் தொடர்புகள், போதைப் பொருள் பாவனைகள் இவ்வாறு மனைவிமார் தாக்கப்பட்டு வருவதற்குறிய காரணங்களாக அறியப்பட்டு வருகின்றன. அத்துடன் கன்னத்தில் அறையப்பட்டும், வயிற்றுப் பகுதிகளில் உதைக்கப்பட்டும், நகக்கீறல்கள், தீக்காயங்கள் போன்ற பாதிப்புக்களை பெண்கள் சந்தித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன.

பெண்களுக்கெதிரான வன்முறை தாக்குதலாகவும், துன்புறுத்தலாகவும் மாறும் தன்மை அதிகரித்து செல்வது அதிர்ச்சியளிப்பதாக இந்த ஆய்வில் ஈடுபட்ட ஒரு தன்னார்வ அமைப்பின் பெண் அதிகாரி அதிர்ச்சி தெரிவித்தார். பாதிப்பிற்குள்ளாகும் பெண்களின் கணவன்மார் வேலையற்றவர்களாகவோ, மது மற்றும் போதைக்கு அடிமையானவர்களாகவோ அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட பெண்களுடன் தொடர்பை பேணுபவர்களாகவோ உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆண்கள் மனைவியுடன் குறிப்பிட்ட காலம் வாழ்க்கை நடத்திவிட்டு, பின்னர் யுவதிகளுடன் கள்ள உறவை வைத்துக் கொள்வதாகவும், இதனால் பாரிய சிக்கல் தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தார். இதனை தட்டிக்கேட்கும் சமயத்தில் மனைவி தாக்கப்படுகிறார், அல்லது மனைவியின் உறவினர்களால் யுவதி தாக்கப்படுகிறார். இரண்டிற்கும் மேலதிகமாக, கள்ளஉறவை பேணுபவர் திடீரென தொடர்பை துண்டிப்பதால் இந்த யுவதிகளும் வாழ்வை தொலைத்துவிட்டு, வேறுதிசைகளிற்கு பயணிக்கிறார்கள் என கவலை தெரிவித்தார். இந்த விடயத்தில் அரசு மற்றும் சமூக நிறுவனங்கள் அவசரமாக கவனம் செலுத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் :- இணையம்




## சந்தானம் இயக்கத்தில் நடிக்கப்போகும் நடிகர் யார்?



பிரபல நகைச்சுவை நடிகர் சந்தானம் விரைவில் ஒரு படத்தை இயக்கவுள்ளாராம். இனிமே இப்படித்தான் படத்தின் மூலம் மீண்டும் ஹீரோவாக களம் இறங்கும் சந்தானம், தமிழகத்தின் முன்னணி நாளி தழ் ஒன்றில் பேட்டியளித்துள்ளார். இதில் நீங்கள் இயக்குனராக எப்போது அவதாரம் எடுப்பீர்கள் என்ற கேள்விக்கு 'கண்டிப்பாக வரும் காலங்களில் படத்தை இயக்குவேன், அதற்காக திரைக்கதையை கூட உருவாக்கிவிட்டேன்.

உதயநிதி, கார்த்தி, விஷால், ஆர்யா போன்ற பல நடிகர்களிடம் கதையை கூறிவிட்டேன்' என்று கூறியுள்ளார். இதைவைத்து பார்க்கையில் விரைவில் இவர்களில் யாரோ ஒருவர் தான் சந்தானம் படத்திற்கு ஹீரோ போல.

## மகேஷ் பாபுவின் தந்தையாக நடிக்கும் சத்யராஜ்



நடிகர் மகேஷ் பாபு தெலுங்கு பட உலகில் இன்றும் ஒரு மாஸ் ஓப்பனிங் உள்ள சூப்பர் ஸ்டாராகத்தான் வலம் வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் PVP மற்றும் மகேஷ்பாபு இணைந்து ப்ரமோச்சவம் என்ற படத்தை மிக பிரமாண்டமாக தயாரித்து இயக்க உள்ளதாக First Look Poster மூலம் அறிவித்துள்ளனர். இப்படத்தின் மூலம் தமிழ் திரைப்பட உலகில் நேரடியாக நுழைகிறார் மகேஷ் பாபு.

இப்படத்தில் மகேஷ் பாபுவுக்கு தந்தையாக நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார் சத்யராஜ், இவர் ஏற்கனவே பாகுபாலி படத்தில் மிக முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடுவீதியில் நஸ்ரியா செய்த கலாட்டா



நேரம், ராஜா ராணி ஆகிய படங்களின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்தவர் நஸ்ரியா. இவர் மலையாள நடிகர் பஹத் பாசிலை திருமணம் செய்துகொண்டு படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார். இந்நிலையில் அவரு டைய ஆசை கணவர் கார் ஒன்றை பரிசாக அளித்துள்ளார். இந்த காரில் சில தினங்களுக்கு முன் நஸ்ரியா நீண்ட தூரம் பயணம் சென்றுள்ளார்.

அப்போது மற்றொரு கார், இவர் கார் மீது மோத, உடனே கோபத்தில் நடுவீதி என்று கூட பார்க்காமல் இறங்கி சண்டை போட ஆரம்பித்துவிட்டார். இதனால், அந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட பொது மக்களுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியது.

## பொலிவூட்டில் தனுஷுக்கு கிடைத்த மற்றொரு விருது



தமிழில் மட்டுமல்லாமல் இந்திய அளவில் மிகப் பிரபலமானவர் தனுஷ். இவருக்கு ஹிந்தியிலும் தற்போது நல்ல வரவேற்பு. ராஞ்சனா, ஷமிதாப் போன்ற படங்கள் அவரை இந்திய அளவில் யாரென்று திரும்பிப் பார்க்கவைத்தது. இந்நிலையில் பொலிவூட்டில் மிக பிரபலமான இணைய தளம் ஒரு வாக்கெடுப்பு நடத்தியது. அதாவது ட்விட்டர் தளத்தில் ரசிகர்களின் நண்பனாகவும், அன்பாகவும் பழகக்கூடிய தென்னிந்திய நட்சத்திரம் யார்? என்ற முடிவில் 47 சதவிகிதம் பெற்று தனுஷ் முதலிடத்தில் உள்ளார்.

அவரை தொடர்ந்து ஸ்ருதிஹாசன் 30 சதவிகிதமும், த்ரிஷா 20 சதவிகிதமும் மற்றும் சிம்பு 9 சதவிகிதமும் பெற்றுள்ளனர். இதன் அடிப்படையில் ரசிகர்களின் நட்பு நாயகன் என்ற பெயரில் பொலிவூட் இணையதளம் தனுஷுக்கு இந்த விருதை அளித்துள்ளது.

## ஸ்ருதிஹாசனை தொடர்ந்து கோபப்படுத்தி வரும் லட்சுமி மேனன்



தல-56 படத்தில் அஜித்துடன் லட்சுமி மேனன், ஸ்ருதிஹாசன் நடித்து வருகிறார்கள். இதில் சமீபத்தில் தான் லட்சுமி மேனன் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டது. மேலும், இதில் ஸ்ருதிக்கு அஜித்துடன் காதல் மற்றும் பாடல் காட்சிகள் மட்டும் தானாம், மற்றப்படி லட்சுமி மேனனை சுற்றித்தான் படத்தின் கதை நகரும் என கூறப்படுகின்றது.

இதை பல பேட்டிகளில் லட்சுமி மேனனே சொல்லிக்காட்ட, ஸ்ருதிக்கு உச்சக்கட்ட கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சுதந்திர தினத்திற்கு ஆர்யா கொடுக்கும் ஸ்பெஷல் விருந்து



ஆர்யா டுவிட்டர் (Twitter) வந்ததில் இருந்து டுவிட்டரே கலை கட்டுகிறது, தான் ஒரு பிரபலம் என்பதை மறந்து, அனைவருடனும் ஜோலியாக பேசி வருகி றார். இவர் தற்போது ராஜேஸ் இயக்கத்தில் வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க படத்தில் நடித்துவருகிறார், இப்படத்தில் தமன்னா இவருக்கு ஜோடியாக நடிக்க, வழக்கம் போல் சந்தானம் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

சமீபத்தில் வந்த தகவலின் படி இப்படம் ஒகஸ்ட் 14ம் திகதி திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது, அடுத்த நாள் ஒகஸ்ட் 15 விடுமுறை என்பதால் படத்தின் வசூல் அதிகரிக்கும் என கூறப்படுகின்றது.

## ரஜினிக்காக சூர்யா செய்த தியாகம்



இந்திய சினிமாவின் ஈடு இணையற்ற சூப்பர் ஸ்டார் என்றால் ரஜினிகாந்த்தான். ஆனால், இவர் படங்களின் அடுத்தடுத்த தோல்வி ரசிகர்களை கொஞ்சம் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால், ரஜினி முதன் முறையாக இளம் இயக்குனரான ரஞ்சித்துடன் இணைந்துள்ளது அனைவரும் அறிந்ததே.

ஆனால், ரஞ்சித் இப்படத்தை இயக்குவதற்கு முன் சூர்யாவுடன் ஒரு படத்தில் இணைவதாக இருந்தார். சூர்யாவிற்கும் இத்தருணத்தில் ஒரு பெரிய ஹிட் தேவைப்படுகின்றது. இந்நிலையில் ரஜினிகாந்த் என்பதால் சூர்யாவே பெருந்தன்மையுடன் ரஞ்சித்தை 'நீங்கள் அவர் படத்தை இயக்கிவிட்டு வாருங்கள்' என்று கூறினாராம்.

## சிவகார்த்திகேயன், அனிருத் இடையே வெடித்த சண்டை



சிவகார்த்திகேயன், அனிருத் இருவரும் நல்ல நண்பர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அப்படியிருக்க, ஏன் இவர்களுக்குள் சண்டை என நீங்கள் கேட்பது புரிகிறது. சண்டை இவர்களுக்குள் இல்லை, இருவரும் இணைந்து மாப்பிள்ளை சிங்கம் படத்தில் பாடப்போகும் பாட்டு தான்.

என்னங்க புரியவில்லையா? விமல் நடிக்கும் மாப்பிள்ளை சிங்கம் படத்தில் ஒரு பாடலை சிவகார்த்திகேயன், அனிருத் இருவரும் இணைந்து பாடவுள்ளார்கள். இதில் அனிருத் காதலை வாழ்த்தியும், சிவகார்த்திகேயன் காதலே செய்யாதீர்கள் என்ற பாணியில் போட்டி போட்டுக்கொண்டு பாடவிருக்கிறார்களாம்.

## அக்ஷய் குமாருடன் இணைந்த விக்ரம்



பொலிவூட் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களில் ஒருவர் அக்ஷய் குமார். சமீபத்தில் கூட இவரது Gabbar is Back படம் வசூலில் பட்டைய கிளப்பி வருகிறது. இவர் தற்போது 24 மணி நேரம் இயங்கும் Shopping TV Channel ஒன்றை தொடங்கி வைத்துள்ளார்.

இதன் மூலம் வீட்டு உபயோகப்பொருட்கள் விற்கும் தொழிலை தொடங்கியுள்ளார். இவருடன் சீயான் விக்ரம் மற்றும் ஜீடிலில் ராஜஸ்தான் அணியின் உரிமையாளரான ராஜ் குந்த்ராவும் இணைந்துள்ளனர்.

## சர்ச்சையான கதைக்களத்தை கையில் எடுத்த மணிரத்னம்



மணிரத்னம் நீண்ட இடைவேளைக்கு பிறகு ஓ காதல் கண்மணி படத்தின் மூலம் மீண்டும் தன் பழைய மார்க்கெட்டை பிடித்துவிட்டார். இதனால், தன் அடுத்த படத்தை பார்த்து நிதானமாக திரைக்கதை அமைத்துவருகிறார். நெருங்கிய வட்டாரங்களின் மூலம் கிடைத்த தகவலின் படி இப்படம் இந்தியா-பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட கதைதானாம். ஏற்கனவே உயிரே, பாம்பே, ரோஜா போன்ற சர்ச்சையான கதைகளை கையில் எடுத்து அதில் வெற்றியும் பெற்றவர் மணிரத்னம்.

தற்போது இந்த படமும் காதல் கதைதான் என்றாலும், இந்தியா-பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட கதை வேறு, மணிரத்னத்திற்கு சொல்லியா தரவேண்டும்? தன் அரசியல்கருத்துக்களை இதில் திணித்தா என்றால் அவ்வளவு தான் என்கின்றது கோலிவூட் வட்டாரம்.

## வட இந்திய இயக்குனருக்கு பதிலடி கொடுத்த மலையாள இயக்குனர்

இந்திய சினிமாவைமொழி அடிப்படையில் பல வகையாக பிரித்து இருக்கின்றது. இதில் பெரும்பாலும் வட இந்திய சினிமா, தென்னிந்திய சினிமா என இரு வகையாக பிரிக்கலாம். வட இந்திய சினிமாவின் முன்னணி இயக்குனர் ரோஹித் ஷெட்டி சென்னை எக்ஸ்பிரஸ் படத்தில் தீபிகா படுகோனை தமிழ் பெண்ணாக காட்டி, அவர் மூலம் தமிழ் பேசி மொழியை கொலை செய்திருப்பார்.

இதையாரும் கண்டுகொள்ளவில்லை, இந்நிலையில் மலையாள சினிமாவின் பிரபல இயக்குனர் அல்போன்ஸ் சமீபத்தில் ரோஹித் ஷெட்டிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

இதில் 'தீபிகா அப்படி தமிழ் பேசியதில் அவர் தவறு ஏதும் இல்லை, இயக்குனரான உங்கள் தவறு தான் அது, உங்கள் மொழியை உயர்த்தி காட்ட வேண்டும்என்பதற்காக,மற்றமொழிகளை கொச்சைப்படுத்தாதீர்கள், எல்லா மொழிகளையும் சமமாக நடத்துங்கள், உங்கள் அறியாமையை கழுவிக்கொள்ளுங்கள்' என அதில் கூறியுள்ளார்.




## சத்தமே இல்லாமல் கமல் படம் படைத்த சாதனை

உலக நாயகன் நடிப்பில் நீண்ட நாட்களுக்கு பிறகு உத்தம வில்லன் திரைப்படம் திரைக்கு வந்தது. தற்போது தன் அடுத்த படமான பாபநாசம் படத்தையும் ரிலீஸ் செய்ய கமல் மற்றும் தயாரிப்புக்குழு ரெடியாகவுள்ளது. ஒரு பெரிய நடிகரின் படம் என்றால் குறைந்தது 90 நாட்களாகவது படப்பிடிப்பு நடக்கும், ஆனால், பாபநாசம் வெறும் 40 நாட்களில் மொத்த படப்பிடிப்பு முடிந்துவிட்டதாம். சமீபத்தில் மிக குறைவான நாட்களில் எடுக்கப்பட்ட முன்னணி நடிகரின் படம் என்றால் அது பாபநாசம் தானாம். இதற்கு முக்கிய காரணம் கமல் மற்றும் இப்படத்தின் இயக்குனர் தான் என தயாரிப்புக்குழு கூறியுள்ளது.



# கவிதைப் பூங்கா



## மனிதா மனிதனாக இரு

நீ
தடுமாறாமல்
திடமாய்
நில்
மனம்
தடுமாறினால்
பலிக்காது
கனவு

நீ
பொறுக்கவேண்டிய
அளவு பொறுமை
கொள்
ஆனால்
பொறுமையும்
வெறுமையாய்
போகக்கூடும்
கவனம்

மது
பழக்கம் அறவே
வேண்டாம்
உனக்கு
நீ
குடிகாரன் என்றால்
ஐம்பதுபுள்ளி
வெட்டு

உன்
தலைநிமிர்ந்து
நடக்கவைப்பது
ஒழுக்கம்
நீ
மனைவியை தவிர
தொடக்கூடாது வேறு
பெண்ணை

உன்
தொலைபேசியில்
தவறான அழைப்புகள்
வரும்
அதை
நிறுத்திவிட்டு
உன்காரியத்தில்
கண்ணாயிரு

ஏழை
உறவுகள் மீது
இரக்கம் காட்டு
கடவுளால்
ஆசீர்வதிக்கப்படுவாய்
நீ
உன் தலைபோனாலும்
விலைபோகக்கூடாது

நீ
காற்று
அடிக்கிற பக்கம்
எல்லாம் சாயாதே
மரங்களைப்போல
தட்டியும்
திறக்கப்படவில்லை
என்றால்
நீ
கதவுகளை
அடித்தே
திற!

உயிரோவியன்

---

சேர்த்தெழுதவா
பிரித்து எழுதவா
என்பது தெரியாமலே
எதிர்ச்சொல்
உதிர்த்துப் போகிறாய்
உன்பார்வைமட்டும்
கோடிட்ட இடங்களாய்
எதையோ விட்டுச்செல்கிறது
பொருத்த தெரியாமல்
விழிக்கிறேன்..
இது
சரியா... தவறா
என்பது புரியாமலே...!

---

பரப்பு இழுவிசையால்
மழைத்துளி
கோளமாகிறது
உன் பார்வை
இழுப்பு விசையால்
என் மணித்துளி
அலங்கோலமாகிறது

---

நீ ஊதிப் பறக்கவிடும்
ஒவ்வொரு
சோப்புக்குமிழ்களும்...
உன்
மூச்சுக்காற்றை
சுமந்த மகிழ்வில்
முக்தியடைந்து
விடுகின்றன...

---

எல்லா மூங்கிலும்
புல்லாங்குழல் ஆகலாம்..
எல்லாப்
புல்லாங்குழலும்
சத்தமிடலாம்..
வித்தகன் அதரம்
உரசும் போதுதான்
சத்தங்கள் கூட
சங்கீதமாகும்...

---

அடிவயிற்றில் நெருப்பை
கட்டித்திரியும் இவை
பாவம்
எத்தனை பெண்குழந்தை
பெற்றவையோ.!
- மின்மினிப் பூச்சிகள் -

---

## வௌவால்

இறகுகள் இல்லாத
சிறகுகள் எனக்கு
பறவைகளில் நானோ
விதி விலக்கு...
கால்கள் இருந்தும்
நடந்ததில்லை நான்..
வால்கள் இல்லாமலே
பறப்பவன் நான்..
முட்டையிட்டு கூடு
கட்டத் தெரியாது... ஆனால்
குட்டி போட்டு
பாலூட்டத் தெரியும்..
ஊர்ப் பறவை எல்லாம்
உறங்க எத்தனிக்கும் போது
என் சிறகுகள் விரியும்..
இரவிலே சுற்றித் திரியும்..
பேயொலிக்கு ஊரடங்கும்
யார் யாரோ பயங்காட்டி...
மீயொலிக்கு ... கண்கள் திரும்பும்
அதுவே எனக்கு திசைகாட்டி.
அந்தரத்தில் ஆடும்
தலைகீழ் தவமே
என் வாழ்க்கை...
உலகின் பார்வைக்கு
நான் என்றென்றும்
வேடிக்கை..
அந்தரத்தில் பிறந்து
அந்தரத்தில் வாழ்ந்து
மண்தொட்டுப் பார்க்காத
மங்கை நான்...
பறவைக்கும் விலங்குக்கும்
இடைப்பட்டுப் பிறந்து
இனப்பெருக்கம் செய்யும்
வினோத திருநங்கை நான்..!

கவிஞர் வள்ளிமுத்து

---

மறக்க நினைக்கும்
ஒவ்வொரு நொடியும்
இரும்பை பற்றும் காந்தமாய்
ஒட்டிக் கொள் (ல்)கிறாய்
எனை என்ன செய்வதாய்
உத்தேசிக்கிறாய் ?
கொஞ்சம் சொல்லேன்
தினம் கொல்வதற்கு இன்றே
கொன்றுவிடேன்
கவலைப்படாதே உன்னில்
வைத்த அன்பு
சாபங்களுக்கு அப்பாற்பட்டது
உனை யார் என்ன சொன்னாலும்
அவன் இறைவன் ஆனாலும்
என்னால் தண்டிக்கப்படுவான்

---

மழைமேகம் கண்டு தோகை
விரித்தாடும் மரங்களை
பளிச்சென புகைப்படம்
எடுத்துக்கொள்கிறது
மின்னல்



# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

தொடர் -௭௨



வதனாவுடன் கூடப்படித்த பலர் வந்து ஆறுதல் கூறினர். அவர்களில் ஒருத்தி மதியம் கடந்தபின்தான் வந்தாள். அப்போது அங்குகூடியிருந்த கூட்டம் கலைந்திருந்தது. பத்துப்பேர் வரையில் பந்தலில் வெத்திலை குதப்பியபடி ஊர்ப்புதினம் பேசிக்கொண்டிருந்தனர். ரவியின் தாய் மற்றும் வதனாவின் தாய் இன்னும் இரண்டு மூன்றுபேர் தான் அவர்களும் அழுது களைத்து படுத்திருந்தனர். இந்தநேரத்திலும் அறிந்து சிலர் வந்து போய்க்கொண்டிருந்தனர். அப்போதுதான் அவள் வந்திருந்தாள். அவளும் கணவனைத்தேடும் பெண்களில் ஒருத்திதான். ஆனால் அவளுக்கு என ஒரு திருத்தமான எதிர்காலமிருந்தது. பரம்பரைப் பணக்காறி, வெளிநாட்டில் இரு அண்ணன்மார் உழைக்கிறார்கள், அதைவிட ஒரு 'பான்சி கடை' நடத்துகிறாள். அப்பா தான் முதலாளி. ஆனாலும் கடை இவளுக்குத்தான். அதை விட அரச உத்தியோகமும் அண்மையில் கிடைத்திருந்தது. ஏ.எல். படித்து நல்ல பெறுபேறு இருந்ததால் செல்வாக்கைப் பயன்படுத்தி எழுதுனர் வேலையைப் பெற்றிருந்தாள். அதைவிட அவளுக்கு ஆண்பிள்ளையொன்றும் தமிழின் வயதில் இருக்கிறது. அதனால் அவளுக்கு வாழ்வில் குறையின்றி இருக்கிறாள். மகிழ்ச்சிகரமான குடும்பச்சூழல். கணவனின் இழப்பை பெரிதாக வெளிக்காட்டவில்லை. அவனும் பிரிந்து சென்று வரவில்லையேயொழிய இறந்ததாக எதுவித ஆதாரமும் இதுவரை கிட்டவில்லை. வந்தவுடன் வதனா அழுதாள். கூட தானும் அழுதாள். சிறிது நேரத்தால் கதைக்க ஆரம்பித்தாள்.

"எப்ப தெரியும்...." "ஆ...அது இண்டைக்குத்தான்."

"ஆரும் உறுதிப் படுத்தினவையோ?" "இம்.... ஒரு அண்ண... சொன்னவர்..."

"அவரும் இயக்கத்தில இருந்தவரோ?" "இல்லை அங்கால இருந்தவர் இவரைத்தெரியும். விசுவமடுவில ஒண்டாயிருந்தவர்."

"பொடி பாத்தவராமோ...?" "இம்..."

"எப்ப?" "கடைசிநாள்,,,"

"சாத்திரம் கேட்டுப் பாத்தனியே...?" "ஓ..."

"என்னவாம்?" "என்ன வாம்,,,"

"அது கேட்டு களைச்சுப் போனன்."

"கடைசிநாள் கனபேர் செத்தது தான்... ஆனால் அண்டைக்கு நிண்டு பாத்து அடையாளம் பாக்கிறளவு சூழல் இல்லை... சும்மா அவனாயிருக்கும் இவனாயிருக்கும் எண்டு யோசிச்சுக்கொண்டு தங்கட உயிர காப்பாத்த ஓடேக்கை ஆர் பாத்தது."

"இது... முதன்நாள் போய் கதைச்சவராம் அடுத்த நாள் தான் நடந்ததாம்..."

"உப்பிடி எத்தின நடந்திட்டு.. அப்ப இயக்கம் படம்வைச்சு கல்லறையும் திறந்து திவசமும் செய்தாப்பிறகும் எத்தினை திரும்பி வந்ததுகள். அதைவிட வரலாற்றை படமாய் நடிச்சு வெளியிட்டாப்பிறகு வந்ததும் இருக்குத்தானே."

"அது... சரி.... இது... அவர் இருந்திருந்தால் எப்பிடியும் தேடியிருப்பர்... இதுவரையும் அப்பிடி ஒரு தகவலும் இல்லை. அதோட அந்த அண்ணை கண்டண்டு சரியாய் சொல்லுறார்."

"விசர்க்கதை கதைக்கிறாய். கடைசிநாள் கண்டதெண்டு சொன்னா ஏன் இவ்வளவு நாளும் சொல்லயில்லை....."

"அது அவர் கிட்டடியிலதான் வந்தவர். அண்டைக்கே எனக்கு தெரியும். 'மாமி தான் தாங்கமாட்டா எண்டு சொல்லாம இருந்தனாங்கள்."

"நீ நம்புறியோ...." "நம்பித்தானே ஆக வேண்டியிருக்கு"

பெருமூச்சுவிட்டபடி கூறினாள். அவளது அந்த வார்த்தையினுள் பல அர்த்தங்கள் மறைந்திருந்தன. ஆனாலும் அவளுடைய மனதில் உறுதியுடன் கூறினாள்.

"இவர் இருந்திருந்தால் எப்பிடியும் ஏதாவது தகவல் வந்திருக்கும்....அதவிட ஆமி பிடிச்சு வைக்கிறளவுக்கு பெரிய தளபதியுமில்லைத்தானே."

"இம்..."

அவளது கதையை வதனா ஏற்றுக்கொள்ளவில்லை என்ற வெறுப்பில் அவளது பதில் வெளிவந்தது. அவன் இறந்தது பற்றி மிக நம்பிக்கைக்குரிய விதத்தில் அறிந்தபின்னர் தேவையற்ற விதத்தில் எதிர்பார்ப்புக்களுடன் வாழ்வதில் அர்த்தமில்லை என்பது தான் வதனாவின் முடிவாகும். ஏனெனில் தனிமையில் வாழ்ந்த காலத்தில் பட்ட கஸ்ரங்களும் துன்பங்களும் அவளுக்கு பாடமாகவே இருந்தது. அதைவிட அவளுக்கு என்ன உத்தரவாதம் உண்டு. அவளது சித்தி முறையான ஒருத்தியும் கணவனை தவறவிட்டு வருவார் என எதிர்பார்ப்புடன் நீண்டகாலம் வாழ்ந்து, கடைசி வரை அவர் வராமலே பத்துப்பதினைந்து வருடங்களாக கஸ்ரப்பட்டதுடன். அவரின் நிலையால் குடும்பத்திலிருந்த இளைய சகோதரர்களும் திருமணம் செய்யாதிருந்து இறுதியில் இருவர் போருக்கு அழைக்கப்பட்டு இன்னமும் இல்லை. கடைசியில் செல்பட்டு அவரும் இல்லை. இப்படியான பாடங்கள் வதனாவுக்கு இருப்பதால் முடிவை ஏற்றுக்கொண்டு அடுத்தகட்டம் பிள்ளைக்கான எதிர்காலத்துக்காக வாழும் உறுதியுடன் இருப்பதால் அவளுடைய பொருத்தமற்ற வெறும்கற்பனைகளை ஏற்றுக் கொள்ளமறுத்தாள். ஆனால் அவளும் தனது நிலைப்பாட்டை நிறுவி தான் கூறுவது போல நடக்கலாம் நடக்கும் என்று கூறினாள்.

"என்னைப்பொறுத்தளவில இவரைப்பற்றி யார் என்ன சொன்னாலும் நம்பமாட்டன். படத்தில காட்டினாலுமில்லை. நேரை பாக்கவேணும் அதுக்குப்பிறகுதான் நம்புவன்."

அவளுடைய நிலைப்பாட்டின்படி அவன் உயிருடன் இருக்கிறான் வருவான் என்பதால் தான் சுமங்கலி பூசைசெய்து குங்குமமிட்டு வருவதாகவும் கூறினாள். அவன் நூலில்கட்டிய தாலியைக்கூட தற்போது பத்துப்பவுணில் அணிந்திருந்தாள். அவளுடைய நடையுடை பாவனையைப் பார்த்தால் ஏதோ மேற்குலக நாட்டில் தொழில் புரியும் கணவனின் வருகைக்காக காத்திருக்கும் மனைவி போலத்தோன்றினாள். வாய்ப்பேச்சில் சாதுரியம் மிக்கவளான இவள் அரசியலையும் அடிக்கடி பேசிக்கொண்டாள்.

"எப்படியும் சர்வதேசம் போர்க்குற்ற விசாரணைக்கு வரும். அப்ப ஒழிச்சு மறைச்சு வைச்சிருக்கிறாக்களையெல்லாம் விடத்தானே வேணும்... அடுத்த மாதம் ஐ.நாவில தெரியும் எல்லாம்."

வதனாவுக்கு இதில் நம்பிக்கையிருக்கவில்லை. ஆத்தில வருது குளத்தில வருகுதெண்டு கடல்லை கப்பல் வருகுதெண்டு பாட்டுப்பாடிக் காட்டின வெளிநாட்டு கனவெல்லாம் பொய்யானதை அவள் மறக்காதிருந்தாள். ஆனாலும் இவளது கதைகளைக்கேட்க கோபம் கோபமாக வந்தது. தற்புகழ்பாடுவதிலும் ஈடுபட்டாள். சிறிது நேரத்தில் தமிழ் அழைக்க எழுந்து போய் முன்பக்கம் வராமலே நின்றாள். போய்வரப்போவதாக கூறி அழைத்தபோது வந்து வழியனுப்பிவைத்தாள். பின்னரும் மாலைவரை சிலர் வந்து போயினர். மாலையில் கால்முகம் கழுவி அவனது படத்தின் முன் தண்ணீர்ச்செம்பு வைத்து வழிபட்டாள். மனது கனத்து கண்ணீர் மார்பில் பொட்டிட்டது.

இரவுவரை அப்படியே இருந்தாள். பின்னர் பிள்ளையை உறங்கவைக்க போய் தானும்படுத்தாள். அப்போது...

"பிள்ளை சாப்பிட்டு படு... காலமை வெள்ளணவே எழும்பவேணும் குளத்தடில ஏதோ செய்யவேணுமாம்."

மாமியார்கூறியதைஏற்றுக்கொண்டு சாப்பிட்டாள். பின்னர் வழமைபோல வந்து படுத்துக்கொண்டாள்.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## சீனா நாட்டுச் சிவன் ஆலயத்தில் தமிழில் கல்வெட்டு

சீனாவில் எழுப்பப்பட்ட சிவன் கோயில் சீன சக்கரவர்த்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டின் கடைசிவரிகள் சீன எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. சீன நாட்டில் காண்டன் எனும் நகருக்கு 500 கல் வடக்கே உள்ள சூவன்செள என்னும் துறைமுகநகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்தக்காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் வணிகக் கப்பல்கள் தாய்லாந்து சென்று அதன் மேற்குக் கரையோரமாக உள்ள சில துறைமுகங்களிலும் தங்கிப்பிறகு வியட்நாம் சென்று அங்கிருந்து சீனநாட்டை அடைந்துள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து நேரடியாகச் சீனாவிற்குக் கடல் வழியாகச் செல்லவேண்டுமானால் வங்காள விரிகுடாவைக் கடந்து உள்ள மலாக்கா வழியாகத் தென்சீனக் கடலை அடையலாம். மலேசியத் தீபகற்பத்தைச் சுற்றி இவர்கள் செல்லவேண்டியிருக்கும். ஆனால் இந்தவழி சுற்றுவழியாகும். ஆயிரம் கல்களுக்கு அதிகமாகப் பயணத்தொலைவு நீளும். மேலும் பயணநேரத்திலும் பலமாதம் கூடிவிடும். சீனாவில் தமிழர்கள் காண்டன் நகரில் மட்டுமன்று. வேறு சில இடங்களிலும் வணிகக் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். பிற்காலச் சோழர் காலத்தில், புகழ்பெற்ற வணிகக் குழாமான திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் எனும் குழுவினர் சீனநாட்டின் பல்வேறு பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

குப்லாய் கான் (Kublai Khan)

சூவன்லிசெள துறைமுக நகரில் சிவாலயம் ஒன்று உள்ளது. இந்த ஆலயத்தில் நிறுவப்பெற்றுள்ள சில விக்கிரகம் குப்லாய்கான் என்னும் புகழ்ப்பெற்ற சீனச் சக்கரவர்த்தியின் ஆணையால் அமைக்கப்பட்டதாகும். இவருக்குச் சேகாசைகான் என்ற பெயரும் உண்டு. இவரின் உடல் நலத்திற்காக இந்த ஆலயம் எழுப்பப்பட்டது. இந்தக் கோயில் திருக்கதாலீசுவரம் என வழங்கப்பட்டது. இந்த ஆலயத்தில் உள்ள சிவன் திருக்கதாலீசுவரன் உதயநாயனார் என அழைக்கப்பட்டார். சீனச் சக்கரவர்த்தியின் இந்த ஆணையை நிறைவேற்றியவரின் பெயர் தவச்சக்கரவர்த்திகள் சம்பந்தப் பெருமாள் என்பதாகும். சகயுகம் சித்திராபெளர்ணமி அன்று இந்த ஆலயம் நிறுவப்பட்டது. கி.பி1260ம் ஆண்டு குப்லாய்கான் முடிசூடினான். இவன் உலகையே நடுங்க வைத்த மங்கோலியச் சக்கரவர்த்தியான செங்கிசுகானின் பேரனாவான. மங்கோலியச் சக்கரவர்த்திகள் ஆளுகையில் சீனாவும் இருந்தது.

இவன்தான் பெய்சிங் நகரைக்கட்டி அதைத்தனது பேரரசின் தலைநகராக்கினான். அவருடைய பேரரசு விரிந்து பரந்திருந்தது. வலிமைவாய்ந்த சக்கரவர்த்தியாக அவன் திகழ்ந்தான். புகழ்பெற்ற யுவான் அரசமரபை இவனே தொடங்கியவனாவான். தமிழ்நாட்டில் பிற்காலப்பாண்டியப் பேரரசு அரசோச்சிய காலத்தில் இவன் சீனப்பேரரசின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். பாண்டிய அரச குலமும் குப்லாய்கானும் மிகுந்த நட்புறவுடன் திகழ்ந்தனர். அப்போதிருந்த பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் ஆவான். இருநாடுகளுக்கிடையேயும் தூதர்கள் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டது.

சீனாவில் எழுப்பப்பட்ட இந்த சிவன் கோயில் சீன சக்கரவர்த்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு இக்கோவிலில் உள்ளது. இக்கல்வெட்டின் கடைசிவரிகள் சீன எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட மிக அபூர்வமான தமிழ்க்கல்வெட்டு இதுவாகும்.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதருக்கு (மறுமையில் ) நன்மை செய்ய இறைவன் நாடினால் இவ்வுலகிலேயே அவருக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்துவிடுவான். ஒரு மனிதருக்கு (மறுமையில்) அல்லாஹ் தீமையை நாடினால் அவருடைய பாவங்களை நிலுவையில் வைத்து நியாயத் தீர்ப்பு நாளில் கணக்குத் தீர்ப்பான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக்(ரலி) நூல்: *திர்மிதீ 2319*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறை நம்பிக்கையுடைய ஆணும் இறை நம்பிக்கையுடைய பெண்ணும் தமது விஷயத்திலும், தமது பிள்ளைகள் விஷயத்திலும், தமது செல்வங்களிலும் தொடர்ந்து துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவார்கள். அல்லாஹ்வைச் சந்திக்கும் நாளில் அவர்கள் மீது எந்தக் குற்றமும் மீதமிருக்காது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) நூல்: *திர்மிதீ 2323*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் இறைநம்பிக்கையாளருக்கு ஏற்படும் வலி, துன்பம், நோய், கவலை, அவர் உணரும் சிறு மனவேதனை உட்பட எதுவாயினும் அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களில் சில மன்னிக்கப்படாமல் இருப்பதில்லை. அறிவிப்பாளர். அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் நூல் : முஸ்லிம் *5030*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமுக்குஏற்படும்நோயாயினும், அது அல்லாத வேறு எந்தத் துன்பமாயினும் (அதற்கு ஈடாக), மரம் தன் இலைகளை உதிர்த்துவிடுவதைப்போன்று அவருடைய பாவங்களை அல்லாஹ் உதிர்க்காமல் இருப்பதில்லை" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர். அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் நூல் : முஸ்லிம் *5023*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரின் உள்ளங்களில் ஊசலாடும் தீய எண்ணங்களை, அவர்கள் அதன்படி செயற்படாத வரை, அல்லது அதை (வெளிப்படுத்தி)ப் பேசாத வரை அல்லாஹ் (அவற்றுக்குத் தண்டனை வழங்குவதில்லை) மன்னித்துவிடுகிறான். அறிவிப்பாளர். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி *6664*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நபித்தோழர்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "எங்கள் உள்ளத்தில் சில (தடுமாற்றமான) விஷயங்கள் எழுகின்றன. அவற்றை (வெளிப்படுத்திப்) பேசுவதைக்கூட நாங்கள் மிகப்பெரும் (பாவ)காரியமாகக் கருதுகிறோம்" என்று கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "உண்மையிலேயே நீங்கள் அத்தகைய உணர்வுகளுக்கு உள்ளாகின்றீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள், "ஆம்" என்று பதிலளித்தார்கள். அதற்கு, "அதுதான் ஒளிவுமறைவற்ற (தெளிவான) இறைநம்பிக்கை" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் *188*

## உன்னதப்பாட்டு

உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது.

உன் கழுத்து யானைத் தந்தத்தினால் செய்த கோபுரத்தைப்போலவும் உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப்போலவும் உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தைப்போலவும் இருக்கிறது.

உன் சிரசு கர்மேல் மலையைப்போலிருக்கிறது. உன் தலைமயிர் இரத்தாம் பரமமாயிருக்கிறது. ராஜா நடைக்காவணங்களில் மயங்கி நிற்கிறார்.

மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே!. நீ எவ்வளவு ரூபவதி நீ எவ்வளவு இன்பமுள்ளவன்.

உன் உயரம் பனைமரத்தொழுங்கு போலவும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவும் இருக்கிறது.

நான் பனைமரத்திலேறி அதின் மடல்களைப் பிடிப்பேன் என்றேன். இப்பொழுதும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவும் உன் மூக்கின் வாசனை கிச்சிலிப்பழங்கள் போலவும் இருக்கிறது.

உன் தொண்டை என் நேசர் குடிக்கையில் மெதுவாயிறங்குகிறதும் உறங்குகிறவர்களின் உதடுகளைப்பேசப் பண்ணுகிறதுமான நல்ல திராட்சரசத்தைப்போலிருக்கிறது.

நான் என் நேசருடையவள். அவர் பிரியம் என் என்மேலிருக்கிறது.

வாரும் என் நேசரே!. வயல்வெளியில் போய் கிராமங்களில் தங்குவோம்.

அதிகாலையில் திராட்சத் தோட்டங்களுக்குப் போவோம். திராட்சக்கொடி துளிர்ந்து அதின் பூ மலர்ந்ததோ என்றும் பார்ப்போம். அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்.

தூதாயீம் பழம் வாசனை வீசும். நமது வாசல்களண்டையிலே புதியவைகளும் பழையவைகளுமான சகலவித அருமையாக கனிகளுமுண்டு. என் நேசரே! அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்.

ஆ, நீர் என் தாயின் பால்குடித்த என் சகோதரனைப்போலிருந்தீரானால் நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன். என்னை நித்திக்கவுமாட்டார்கள்.

## வித்தியாவின் சாவில் ஆசனமிட்டு அமர ஆசைப்படும் அரசியல்வாதிகள்

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

நேரடித் தொடர்புகளை கொண்டிருந்தவர்களாக இருந்தனர். அரசிடம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கின் காரணமாகவும் இந்த விடயத்தை மூடிமறைக்க முடியவில்லை. விசாரணைக் குழுக்கள் தொடர்ச்சியாக இயங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தக்கூட்டு அழுத்தங்களின் விளைவாக 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் படணி ஆரம்பமாகியது. அமெரிக்க நிபுணர்கள், சர்வதேச மன்னிப்புச்சபை. ஏசியா பௌண்டேசன் அதிகாரிகள், துறைசார்ந்த பேராசிரியர்கள், பொதுமக்கள், உள்ளூர் அதிகாரிகள், அமைப்புகள், சர்வதேச ஊடகங்கள் கவனிப்பில் முன்னிலை வகித்தன. சோமரத்ன ராஜபக்ஷ முதலில் ஒரு புதைகுழியைக் அடையாளம் காட்டினார். முதல் கட்டமாக அவர் காட்டிய இடத்திலிருந்து 2 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்றில் கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. மற்றைய எலும்புக் கூடு சேதம் அடைந்திருந்ததால் கைகள், கண்கள் கட்டப்பட்டிருந்தனவா? என்பதை அறிய முடியவில்லை. கண்கள், கைகள், கட்டப்பட்டநிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டின் மண்டையோட்டுப் பகுதியில் காணப்பட்ட ஆழமான சிதைவுகள் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டனர். இரண்டு எலும்புக்கூட்டிலும் அடிகாயங்கள் தாராளமாகக் காணப்பட்டன. ஒரு எலும்புக்கூடு நிமிர்ந்தும், மற்றையது பக்கவாட்டிலும் படுத்திருப்பது போன்று போடப்பட்டிருந்தன. இரண்டு எலும்புக் கூடுகளுக்கும் நடுவில் சிலிப்பர் கட்டைகள் காணப்பட்டன. இந்த எலும்பு மீட்பு சுவாரஸ்யங்கள் நீடிக்கவில்லை.

இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதோடு புதைகுழி தோண்டும் படலம் இடைநிறுத்தப்பட்டது. தமது பிள்ளைகளின் எலும்புகளைத் தேடி செம்மணி புதைகுழிக்கு வந்திருந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இந்த எலும்பு ஆதாரங்கள் யாழ்ப்பாணத்தை மனிதப் புதைகுழியின் நகராக்கியது. தென் ஆசியாவிலேயே அதிகளவாக மக்கள்கொன்று புதைக்கப்பட்ட இடமாக செம்மணி புதைகுழியை ஊடகங்கள் அடையாளப்படுத்தின. புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு மறுநாளே உரிமைகோரல்களும் யாழ்ப்பாணம், அரியாலைப்பகுதியிருந்து எழுந்தன. அரியாலையில் இருந்த இயந்திர திருத்தகம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில் காணாமல்போன இரு இளைஞர்களின் எலும்புகளாக அவை இருந்தன. 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இருவரும் வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது இராணுவத்தால்கைதாகிப்பின்னர் காணாமல் போயிருந்தனர்.

அதன்பின்னர் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றிய அறிக்கைகள் அடிக்கடி வெளியாகின. பல்வேறு தரப்பட்ட அரசியல் கட்சிகளும், உள்ளூர், சர்வதேச அமைப்புகளும் அதில் அடக்கம். ஏனைய சிப்பாய்களையும் செம்மணிக்கு கூட்டிவந்து மனிதப்புதைகுழிகளை அடையாளம் காட்டச்செய்ய வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. பக்கச்சார்பற்ற, நீதியான, விசாரணைகளை மேற்கொள்வதோடு, அனைத்துப் புதைகுழிகளையும் தோண்டி உண்மையைக் கண்டறியுமாறு செம்மணி வந்து திரும்பிய சர்வதேச பிரதிநிதிகள் கொழும்பில் அறிக்கைவிட்டனர். அதன் பின் அவர்களும் வாய்திறக்கவில்லை.

**தொடரும்...**

# அறிவியல் உலகம்

## கை அசைவுகளையும் துல்லியமாக கண்டுபிடிக்கும் நவீன சாதனம்



தொடுதிரை தொழில்நுட்பத்தினைத் தொடர்ந்து கை அசைவுகளைக் கொண்டு சாதனங்களைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமானது பிரபல்யமடைந்துவருகின்றது. இத் தொழில்நுட்பத்தினைக் கொண்ட சாதனங்களை உற்பத்தி செய்வதில் கூகுள் நிறுவனமும் முனைப்புக்காட்டி வருகின்றது. இதன் ஒரு அங்கமாக சிறிய கை அசைவுகளையும் துல்லியமாக கண்டறியக்கூடிய வன்பொருளை (Hard ware) சாதனத்தை Project Soli எனும் திட்டத்தினூடாக உருவாக்கியுள்ளது. இச்சாதனமானது கை அசைவுகளை மட்டுமல்லாது விரல் அசைவுகளையும் உணரக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இதேவேளை விரைவில் இப்புதிய தொழில்நுட்பத்தினை முற்றுமுழுதாகக் கொண்ட ஸ்மார்ட் சாதன வடிவமைப்பில் கூகுள் நிறுவனம் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## Projector உடன் கூடிய ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகம்



ஸ்மார்ட் கைப்பேசி உலகில் Projector உடன்கூடிய கைப்பேசிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் அவை மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் Lenovo நிறுவனம் தற்போது Lenovo Smart Cast எனும் Projector உடன்கூடிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. இதில் Projector ஊடாக Key Board இனை இயக்கும் வசதியும் உள்ளடக்கப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும். சில புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த Projector கைப்பேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கூகுள் நிறுவனத்தின் Photos apps அறிமுகம்




கூகுள் நிறுவனம் Photos apps ஒன்றினை மொபைல் சாதனங்களுக்காக வெளியிடவுள்ளதாக கடந்த வாரம் வெளியாகிருந்த நிலையில் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அப்பிளின் iOS, மற்றும் கூகுளின் அன்ரோயிட் சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய இந்த அப்பிளிக்கேஷனை தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளமுடியும்.

Google+ தளத்தில் பயன்படுத்தப்படும் புகைப்படங்களை இந்த அப்பிளிக்கேஷனைக் கொண்டு பேக்கப் செய்து கொள்ள முடிவதுடன், 16MP வரையானதும் 1080 Pixel கொண்ட புகைப்படங்களையும் தரவேற்றம் செய்துகொள்ளமுடியும்.

## அழைப்பினை ஏற்படுத்த புதிய அப்பிளிக்கேஷன் அறிமுகம்




மொபைல் சாதனங்களுக்கான தொடர்பாடல் அப்பிளிக்கேஷன்களை உருவாக்கும் Line நிறுவனம் தற்போது ஒரே நேரத்தில் 200 பேருக்கு அழைப்பினை ஏற்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷன் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. முற்றிலும் இலவசமாக தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளக்கூடியதாக இருக்கும் Popcorn Buzz எனும் இந்த அப்பிளிக்கேஷன் அன்ரோயிட் மொபைல் சாதனங்களுக்கு மட்டுமே தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அப்பிளிக்கேஷனில் வீடியோ வசதி உட்பட மேலும் பல வசதிகளை உள்ளடக்குவதற்கான திட்டங்கள் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் iOS இயங்குதளத்தில் செயற்படும் மொபைல் சாதனங்களுக்காகவும் அறிமுகம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூகோள வெப்ப அதிகரிப்பு முடிவுக்கு வருகிறதா?



பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகளால் பூகோளத்தின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இதனால் பல எதிர்விளைவுகள் ஏற்படும் எனவும் தொடர்ச்சியாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுவந்தன. இந்நிலையில் தற்போது அனைவருக்கும் ஆறுதல் தரும் தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதாவது அமெரிக்காவின் அரச ஆய்வு நிறுவனம்ஒன்றினால்மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் முன்னரை விடவும் இந்த வருடம் வெப்ப அதிகரிப்பு குறைவாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இதற்காக கடந்த 15 வருடகாலமாக சேகரிப்பட்ட வெப்ப அதிகரிப்பு தரவுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளனர். இதேவேளை வெப்ப அதிகரிப்பானது நீண்ட காலத்திற்கு தொடராது எனவும், அது விரைவில் முடிவுக்கு வரலாம் எனவும் குறித்த ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## கண்பார்வையை பரிசோதிக்கும் புதிய ஸ்மார்ட்போன்

இங்கிலாந்தை சேர்ந்த விஞ்ஞானிகள் துல்லியமாக கண்பார்வையை பரிசோதனை செய்யும்புதிய ஸ்மார்ட்போன் அப்ளிகேஷன் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இங்கிலாந்தை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சிறிய கண் பரிசோதனையில் கிட் (பீக்) என்ற பெயரில் அப் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். போனின் கெமராவை கொண்டு கண் விழித்திரையை ஸ்கேன் செய்வதன் மூலமும், போனின் ப்ளாஷ் லைட்டை கொண்டு கண்ணில் ஏற்படும் நோய்களையும் கண்டறிய முடியும்.

## அடுத்த மாதம் அறிமுகமாகின்றது விண்டோஸ் 10



மைக்ரோசொப்ட் நிறுவனம் 7 வகையான சாதனங்களுக்கான இயங்குதளங்களை ஒரேநேரத்தில் முதன் முறையாக வெளியிடவுள்ளது. இதேவேளை விண்டோஸ் எனும் பெயரை தாங்கி வரவுள்ள இறுதி இயங்குதளமாக விண்டோஸ் 10 உள்ளதாக கடந்த வாரங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் இவ் இயங்குதளமானது எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இயங்குதளத்தில் விண்டோஸ் 8 இயங்குதளத்தில் நீக்கப்பட்டிருந்த Start Button மீண்டும் தரப்பட்டுள்ளதுடன், மேலும் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் உலகெங்கிலும் உள்ள 190 நாடுகளில் வசிக்கும் 1.5 பில்லியன் மக்கள் விண்டோஸ் இயங்குதளத்தினையே பயன்படுத்திவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியாகப் பயணம் செய்ய உதவும் அதி நவீன சாதனம்



Tricopter எனப்படும் தனியாக பயணம் செய்ய உதவும் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாதனம் முதன் முறையாக 1 நிமிடங்கள் 31 செக்கன்கள் வரை பறப்பில் ஈடுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளது. ஹங்கேரியிலுள்ள Miskolc Air field நிறுவனத்தில் பணிபுரியும் குழு ஒன்றினால் இச்சாதனம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்டமாக 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை பறப்பில் ஈடுபடக்கூடியதாக வடிவமைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 30 தொடக்கம் 40 நிமிடங்கள் வரை பறக்கும் அளவிற்கு மேம்படுத்தப்படவுள்ளது.

## விரைவில் அறிமுகமாகும் ஸ்மார்ட் ஆடைகள்



ஸ்மார்ட் தொழில்நுட்பமானது தற்போது அனைத்துவிதமான துறைகளிலும் உட்புகுத்தப்பட்டு பிரபல்யமடைந்து வருகின்றது. இவ்வாறிருக்கையில் கூகுள் நிறுவனம் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தினைக் கொண்ட ஆடைகளை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

Jacquard எனும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ள இந்த ஆடைகளுக்கு சில்க், கொட்டன், பொலியெஸ்ரர் போன்ற துணி வகைகளில் உலோக இழைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதுபற்றி கூகுள் நிறுவனம் தெரிவிக்கையில், இதேபோன்ற தொழில்நுட்பம் ஏற்கனவே அறிமுகமாகியிருந்த போதிலும் Jacquard திட்டத்தினூடாக உருவாக்கப்படும் இத்துணிகள் குறைந்த விலையில் உற்பத்திசெய்யக்கூடியதாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளது.

## Xperia M4 Aqua கைப்பேசி விற்பனையை விரிவுபடுத்தும் Sony



சிறந்த கைப்பேசிகளை அறிமுகம் செய்துவரும் Sony நிறுவனம் அண்மையில் Xperia M4 Aqua எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தது. இக் கைப்பேசிக்கு சிறந்த வரவேற்பு காணப்படுகின்ற நிலையில் மேலும் பல நாடுகளில் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளது. இதன்படி இம்மாதம் கனடாவில் அறிமுகம் செய்யவுள்ளது.

5 அங்குல அளவு மற்றும் 1280 x 720 Pixel Resolution உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியில் Octa Core Qualcomm Snapdragon 615 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM காணப்படுகின்றன. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா. 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## சமைத்து உண்ண ஆசைப்படும் சிம்பன்சிகள்



விலங்கு இராச்சியத்தில் உள்ள பல்வேறு வகையான குரங்குகளில் சிம்பன்சிக்களே மனிதனை மிகவும் ஒத்ததாக காணப்படுகின்றது. இவ் ஒற்றுமையானது உருவத்தில் மட்டுமல்லாது செயற்பாடு மற்றும் சிந்தனைத் திறனிலும் மனிதனை ஒத்ததாகவே இருப்பதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. இதற்கு சான்றாக சிம்பன்சிகள் தமக்கு தேவையான உணவை தாமே சமைத்து உண்ண விரும்புவதாக அவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வில் ஈடுபட்டவர்கள் சிம்பன்சிகளிடம் சமைக்கும் சாதனங்களையும், துண்டு துண்டாக வெட்டப்பட்டு சமைத்த தக்காளிப் பழங்களையும் வழங்கியுள்ளனர். ஆனால் ஏற்கணவே சமைக்கப்பட்டிருந்த தக்காளிப் பழங்களை மீண்டும் தாமே சமைப்பதற்கு சிம்பன்சிகள் முயற்சித்துள்ளன. இதன் மூலம் சிம்பின்சிகள் தமக்கு தேவையான உணவை தாமே சமைத்து சாப்பிட விரும்புவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**புதினாவில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைதரேற், நார்ப்பொருள், உலோகச்சத்துக்கள், பொஸ்பரஸ், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் ஏ, நிக்கோட்டினிக் அசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன.**



# விளையாட்டு



# உலகம்



## இலங்கையில் 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை



இலங்கையில் நடத்தப்பட்ட பந்துவீச்சு சோதனையில், விதிமுறைகளுக்கு புறம்பாக பந்துவீசியதாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சி.க்கும் இலங்கை கிரிக்கெட் வாரியத்துக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி, விதிகளுக்கு மாறாக பந்துவீசுபவர்களை உள்ளூரிலேயே அடையாளம் காணும் பணி நடைபெற்றது.

கடந்த 2014-15ஆம் ஆண்டுகளில் இலங்கை உள்ளூர் கிரிக்கெட் அளவில் 170 பந்துவீச்சாளர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு அவர்களது பந்துவீச்சு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. இதில் 42 பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சு முறை சரியாக இருந்ததால் அவர்கள் தடையில் இருந்து தப்பினர். விதிகளுக்கு முரணாக பந்துவீசிய 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதத்தில் பாகிஸ்தானில் 16 வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஊழல் புகார்களுக்கு இடையே பதவி விலகிய பிபா அமைப்பின் தலைவர்



தொடர்ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இடையே பிபா அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக செப் பிலாட்டெர் அறிவித்துள்ளார். சுவிட்சர்லாந்தை சேர்ந்த செப் பிலாட்டெர் (Sepp Blatter) பிபா அமைப்பின் தலைவராக 1998 ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். கடந்த 17 ஆண்டுகளாக பிபாவின் தலைவராக செயற்பட்டுவருகிறார். இந்நிலையில் கடந்த ஆண்டுநடைபெற்றஉலககோப்பை கால்பந்து போட்டிகளில் ஊழல் நடந்திருப்பதாக புகார் எழுந்துள்ளது. இந்நிலையில் பிபா அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக செப் பிலாட்டெர் அறிவித்துள்ளார்.

ஜூரிச்சில் நடைபெற்ற பிபா மாநாட்டில் கலந்துகொண்ட பிலாட்டெர் பேசுகையில், கடந்த 40 ஆண்டுகளாக எனக்கும் கால்பந்து மற்றும் பிபா அமைப்புக்கும் இடையே பிரிக்கமுடியாத பந்தம் இருந்துவருகிறது. பிபா அமைப்பை மற்ற அனைத்தையும் விட அதிகமாக நேசிக்கிறேன். தற்போது தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று முடிவு செய்துள்ளேன், எனினும் அடுத்த தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை இந்த பதவியில் தொடரவுள்ளேன். பிபா அமைப்பின் தலைவருக்கான தேர்தலை உடனே நடத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பாவின் கார் பறிமுதல்



பாகிஸ்தான் அணியில் நீண்டகாலமாக அணித்தலைவராக இருப்பவர் மிஸ்பா உல்ஹக். இவர் தனது land cruiser காருக்கு செலுத்த வேண்டிய ரூ.39 லட்சம் வரி செலுத்தாததால் வருவாய் துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் பாகிஸ்தான் நிதித்துறை அமைச்சர் Ishaq Dar தலையிட்டதையடுத்து பிரச்சினை தீர்ந்தது.

## மிரள வைத்த சச்சின், லாரா - கிளார்க்



தலைசிறந்த சர்வதேச வீரர்களின் பெயர்களை அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் வரிசைப்படுத்தியுள்ளார். மைக்கேல் கிளார்க் டுவிட்டர் வலைதளத்தில் ரசிகர்களுடன் கலந்துரையாடினார். அப்போது ரசிகர்கள் அவரிடம் உங்களுக்கு எதிராக சிறப்பாக விளையாடிய வீரர்கள் மற்றும் தலைசிறந்த வீரர்கள் யார் என்று கேட்டனர்.

அதற்கு பதிலளித்த கிளார்க், சச்சின் டெண்டுல்கர், காலிஸ், ஷேன்வார்னே, கிளைன் மெக்ராத், பிரையன் லாரா ஆகியோரின் பெயர்களை வரிசைப்படுத்தினார். மேலும், பந்துவீச்சில் உங்களை மிரட்டியவர் யார் என்ற கேள்விக்கு, பாகிஸ்தானின் சோயிப் அக்தரின் பெயரை அவர் குறிப்பிட்டுள்ளார்.

## களைகட்டிய ரோஹித்- ரித்திகா நிச்சயதார்த்தம்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரோஹித் சர்மா - ரித்திகா நிச்சயதார்த்தம் மும்பையில் நடந்தது. ரோஹித் சர்மாவின் கிரிக்கெட் விவகாரங்கள் மற்றும் விளம்பரங்களை கவனிக்கும் மேலாளராக ரித்திகா கடந்த 6 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்.

ரித்திகாவுடன் ஆரம்பத்தில் நட்புடன் பழகிய ரோஹித் சர்மாவுக்கு அதுவே நாளடைவில் காதலாக மாறியது. இந்நிலையில் கடந்த மாதம் தனது பிறந்த நாள் தினத்தன்று இருவருக்கும் இடையே உள்ள உறவை டுவிட்டரில் ரோஹித் சர்மா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மும்பை பொரிவலி ஸ்போர்ட்ஸ் கிளப்பில், இவர்களது நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இதில் அவரது நண்பர்கள் சிலர் மட்டும் பங்கேற்றனர்.

அதேபோல் பொலிவூட் நடிகர் சொகைல் கான் கலந்து கொண்டார். அப்போது எடுத்துக்கொண்ட சில புகைப்படங்களை ரித்திகா டுவிட்டரில் பகிர்ந்துள்ளார்.

## அவமானப்பட்ட கிறிஸ்டினோ ரொனால்டோ



கால்பந்து விளையாட்டைப் பற்றி எதுவும் தெரியாத ஒரு சாமானியனுக்குக் கூட கிறிஸ்டினோ ரொனால்டோ என்ற பெயர் தெரியும். ரியல் மாட்ரிட் அணியின் சூப்பர் ஸ்டாரும் கால்பந்து உலகின் ஜாம்பவான்களில் ஒருவருமான ரொனால்டோ தனது மோசமான நடத்தையால் பொலிஸார் முன்பு அவமானப்பட்டு தலைகுனிந்துள்ளார். பரபரப்பான 'லா லிகா' கால்பந்து தொடர் சமீபத்தில் நடந்து முடிந்ததையடுத்து, ப்ரான்சின் கடற்கரை நகரமான செயிண்ட் ட்ரோபஸ்க்கு நண்பர்களுடன் விடுமுறையைக் கொண்டாடச் ரொனால்டோ சென்றிருந்தார்.

அங்குள்ள இரவு விடுதி ஒன்றில், பார்ட்டி முடிந்து இரவில் வெளியே வந்த ரொனால்டோ எதிரில் இருந்த ஐஸ்க்ரீம் பார்லர் முன்பு சிறுநீர் கழித்தார். கடும் போதையிலும் காருக்கு பின்னாடி நின்றபடி, மறைவாகத்தான் இந்த காரியத்தைச் செய்தார். ஆனால் இதை கவனித்துவிட்ட ரோந்து பொலிஸார் அவரை கூப்பிட்டு, 'இனி இதுபோன்ற காரியங்களில் ஈடுபடக்கூடாது' என்று எச்சரித்துவிட்டு அங்கிருந்து ரொனால்டோவை பத்திரமாக அனுப்பி வைத்தனர்.

## பெண்ணாக மாறிய ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தடகள வீரர்



ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற, அமெரிக்காவின் முன்னாள் தடகள வீரர், வில்லியம் புரூஸ் ஜென்னர் முழுப் பெண்ணாக மாறியுள்ளார். இவர் பிர பல ஹொலிவூட் நடிகை கிம் கர்தஷியானின் வளர்ப்புத் தந்தை ஆவார். இவருக்கு மூன்று மனைவிகளும் 6 குழந்தைகளும் உண்டு. தற்போது 65 வயதான இவர் கடந்த 1976ம் ஆண்டு மான்ட்ரியல் நகரில் நடந்த ஒலிம்பிக்கில் டெகாத்லான் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர். இதன் பின்னர் தொலைக்காட்சி தொடரில் அவர் நடிக்க ஆரம்பித்தார்.

இந்நிலையில் புரூஸ் ஜென்னர் தற்போது முதன்முறையாக முழுப் பெண்ணாக மாறிய தனது தோற்றத்தை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். சமீபத்தில் வெளிவந்த வானிட்டி ஃபேர் இதழில், கால் மீ கேட்லீன் ஜென்னர் (Call me Caitlyn Jenner) என்று புரூஸ் ஜென்னர் சொல்வது போல பெண்கள் உடையில் அவர் இருப்பது போன்ற கவர்ச்சிப் படம் இடம் பெற்றிருந்தது. இது குறித்து அவர் கூறுகையில், புரூஸ் எப்போதுமே பொய் சொல்பவன் என்றும், கேட்லீனிடம் ரகசியம் என்று எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்பு இருந்ததை விட தற்போது தான் நான் சுதந்திரமானவளாக உணர்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். தனது தந்தையின் புதிய அவதாரம் குறித்து, மகள் கிம் கர்தஷியான் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். தனது தந்தை மிகவும் அழகுஎன்றும்அவர்பெருமிதப்பட்டுள்ளார். கேட்லீன் புதிய டிவிட்டர் கணக்கையும் தொடங்கியுள்ளார். ஆரம்பித்த 4 மணி நேரத்திற்குள் 10 லட்சம் பலோயர்கள் அவரை பின் தொடர்கின்றனர். இது புதிய உலகசாதனையாகும். இதற்கு முன்பு இந்த சாதனை அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் இருந்தது. அவர் ஆரம்பித்த டிவிட்டர் கணக்குக்கு 5 மணி நேரத்தில் 10 லட்சம் பேர் வந்தது தான் சாதனையாக இருந்தது. இதை ஜென்னர் முறியடித்துள்ளார்.

## அலீம் தர், தர்மசேனா அடங்கிய நடுவர் குழுவில் தமிழருக்கு இடம்



சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள எலைட் பேனல் நடுவர் குழு பட்டியலில் 11 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியர் ஒருவருக்கு இடம் கிடைத்துள்ளது. இந்த குழுவில் ஆண்டுதோறும் 12 பேர் இடம் பெற்றிருப்பார்கள். மிகவும் கௌரவமிக்க இந்த பட்டியலில் இடம் பெறுபவர்களுக்கு தான் உலகக்கிண்ணம் போன்ற பெரிய போட்டிகளுக்கு நடுவராக பணியாற்ற முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இந்நிலையில் ஐசிசி வெளியிட்டுள்ள 2015-2016ம் ஆண்டு எலைட் பேனல் நடுவர் குழுவில் இந்தியாவின் சுந்தரம் ரவி இடம் பெற்றுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த 49 வயதான சுந்தரம் ரவி இதுவரை 6 டெஸ்ட், 24 ஒருநாள் போட்டி மற்றும் 12 டி20 போட்டிகளுக்கு நடுவராக இருந்துள்ளார். கடைசியாக எஸ்.வெங்கட்ராகவன் இந்த குழுவில் அங்கம் வகித்திருந்தார்.

## செல்பியில் கலக்கிய மெஸ்ஸி, கோபே

கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸியும், கூடைப்பந்து ஜாம்பவான் கோபேயும் இணைந்து நடித்த விளம்பரம் கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த விளம்பரமாக ரசிகர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிரபல வீடியோ இணையத்தளமான யூ- டியூப் தனது 10ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இதுவரை வெளிவந்ததில் சிறந்த விளம்பரம் எது? என்று பயனர்களிடம் கேட்டுக்கொண்டது.

இதில் பயனர்கள், டர்கிஷ் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்திற்காக மெஸ்ஸியும், கோபேயும் நடித்த விளம்பரத்திற்கு அதிக வாக்குகளை அளித்துள்ளனர். இந்த விளம்பரத்தில் செல்பி எடுக்கும் போட்டி நடைபெறும். இதில் இருவரும் நாடுநாடாக அலைந்து செல்பி எடுப்பார்கள். இது பயனர்களை அதிகமாகவே கவர்ந்துள்ளது. இந்த வீடியோவை யூ டியூபில் இதுவரை 14 கோடிக்கும் மேற்பட்டவர்கள் கண்டுகளித்துள்ளனர்.

## சதமடித்து உலக சாதனை படைத்த அடம் வோக்ஸ்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் அடம் வோக்ஸ் சதமடித்து அசத்தியுள்ளார். 35 வயதாகும் அடம் வோக்ஸுக்கு இது முதல் டெஸ்ட் போட்டி ஆகும். இதில் சிறப்பாக விளையாடிய இவர் தனது முதல் சதத்தை பதிவு செய்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் போட்டி வரலாற்றில் அதிக வயதில் சதமடித்த வீரர் என்ற புதிய சாதனையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.

# உலகச் செய்திகள்

WORLD WATCH

## காட்டுக்குள் இழுத்து சென்று கற்பழிக்கப்படும் கொடுமை



ரொஹிங்யா முஸ்லிம் பெண்களை கடத்தல்காரர்கள்பலாத்காரம் செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. பௌத்த மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மியான்மரில், ரொஹிங்யா முஸ்லிம்கள் மீது அண்மைக்காலமாக தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்த தாக்குதலுக்கு பயந்து ரொஹிங்யா முஸ்லிம்கள், மலேசியா இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஆதரவுகோரி சட்டவிரோதமாக செல்கின்றனர். ஆதரவுகோரி செல்லும் இவர்கள் பயணிக்கும் வழியிலேயே, பசியாலும், பட்டினியாலும் செத்துமடிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன, சமீபத்தில் மலேசிய எல்லைப்பகுதியில் 139 கல்லறை தளங்களும், 28 கடத்தல் முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கல்லறை தளங்களில் 100க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டதால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த எலும்புக்கூடுகள் கடத்தல்காரர்களால் கடத்திவரப்பட்ட, ரொஹிங்யா முஸ்லிம் மக்களுடையதாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக மலேசிய உள்துறை மந்திரி அகமது ஷாகித் ஹமிதுவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் அடைக்கலம் தேடிவந்த ரொஹிங்யா முஸ்லிம் பெண்களை கடத்தல் கும்பல் பாலியல் பலாத்காரம் செய்ததாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது. தாய்லாந்து நாட்டின் படாங் பேசர் பகுதியில் உள்ள கடத்தல் முகாமில் இருந்து தப்பித்த நூர் கைதா அப்துல் சுகுர் என்ற பெண்மணி, இது குறித்து மலேசிய செய்தி ஊடகமான பெர்னாமாவுக்கு அளித்துள்ள பேட்டியில், ஒவ்வொரு நாள் இரவிலும் எங்கள் இனத்தை சேர்ந்த 2 அல்லது 3 இளம்பெண்களை காட்டுக்குள் இழுத்துச்சென்று கடத்தல்கும்பல் பாலியல் பலாத்காரம் செய்தனர். இதனால் இரு பெண்கள் கர்ப்பமடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். இதே போன்ற பாலியல் பலாத்கார சம்பவங்கள் மலேசிய பகுதியிலும் நடைபெற்றதாக சுகுரின் கணவரான நூருல் அமின் நோபி ஹூசைனும் கூறியுள்ளார்.

## மரணத்தின் பிடியில் எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி



எகிப்தின் முன்னாள் அதிபர் முகம்மது மோர்சிக்கு வருகிற 16 ஆம் திகதி மரண தண்டனை குறித்த இறுதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என கெய்ரோ நீதிமன்றம் தெரிவித்துள்ளது. எகிப்தில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட முதல் அதிபர் முகம்மது மோர்சி(63). முப்பதாண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012ஆம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கிவிட்டு அதிபர் பதவியைப் பிடித்த மோர்சியால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை, இவரது வன்முறை செயல்கள் அதிகரித்ததால் மக்கள் போராட்டத்தில் இறங்கியதையடுத்து இராணுவம் தலையிட்டு ஆட்சியை கவிழ்த்தது.

இந்நிலையில், கடந்த 2011ஆம் ஆண்டு சிறையில் கலவரத்தை ஏற்படுத்தி தப்பித்தது, உளவு பார்த்தது, பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர், லெபனானின் ஹிஸ்போலா அமைப்பினர், ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படை ஆகியவற்றுடன் சேர்ந்து சதி செய்தது, தீவிரவாதத்துக்கு நிதியுதவி அளித்தது போன்ற குற்றச்சாட்டுகள் மோர்சி மற்றும் முஸ்லிம் சகோதரத்துவ தலைவர்கள் மீது சுமத்தப்பட்டது.

இவர்களில் சுமார் 100 பேருக்கு ஏற்கனவே தனித்தனியாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், மோர்சிக்கும் கடந்த மே மாதம் 16 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து எகிப்து சட்டப்படி மரண தண்டனை பற்றிய தீர்ப்புகளை, மத குரு 'கிராண்ட் முப்தி' பரீசிலனை செய்து தனது கருத்துக்களை தெரிவிப்பார். இந்த தண்டனை தொடர்பாக தலைமை முப்தி ஆய்வுசெய்து, கருத்து தெரிவித்த பின்னர் யூன் 2ஆம் திகதி கெய்ரோ நீதிமன்றம் தனது இறுதி தீர்ப்பை அறிவிக்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தலைமை முப்தியின் பரிந்துரை நீதிபதியிடம் வந்து சேர்ந்தது. இதையடுத்து, அந்த பரிந்துரையையும், முப்தியின் கருத்தையும் பரிசீலித்து முடிவெடுக்க அவகாசம் தேவைப்படுவதால் இறுதி தீர்ப்பு வரும் 16ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிபதி ஷபான் எல் ஷமி தெரிவித்துள்ளார்.

## காதல் பூட்டுகளுக்கு பதிலாக அழகிய ஓவியங்கள்

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸில் 'காதல் பூட்டுகளை' அகற்றிய நகர நிர்வாக அதிகாரிகள், அதே இடத்தில் கலை வண்ணம் மிக்க அழகிய ஓவியங்களை அமைத்து வருவதாக தெரிவித்துள்ளனர். பாரீஸ் நகரில் உள்ள Pont des என்ற பாலத்தில் காதலர்கள் தங்களின் நினைவுகளாக பூட்டுகளை கோர்த்து வருவது பல ஆண்டுகளாக வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. தற்போது சுமார் ஒரு மில்லியன் அளவில் பூட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், இவற்றின் ஒட்டுமொத்த எடையானது 45 டன்னாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதிகரிக்கும் பூட்டுகளின் எடையால், பாலத்திற்கும் அதன் கீழ் பயணிப்பவர்களுக்கும் ஆபத்து விளைய வாய்ப்புள்ளது என்பதால், ஒட்டுமொத்த பூட்டுகளையும் அகற்ற நகர நிர்வாகம் சில தினங்களுக்கு முன்னர் உத்தர்விட்டனர். இதனைத் தொடர்ந்து, கடந்த இரண்டு நாட்களில் ஒட்டுமொத்த பூட்டுகளையும் ஊழியர்கள் அகற்றினர். பூட்டுகள் கோர்க்கப்பட்ட இடத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடையாதவாறு, அதேஇடத்தில் அழகிய ஓவியங்களை வரையும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

புகழ்பெற்ற ஓவியர்களான Brusk, Pantonio, Jace மற்றும் El Seed ஆகியவர்களின் கைவண்ணத்தில் வரையப்பட்ட இந்த ஓவியங்களை அமைக்கும் பணி, 50 சதவிகிதம் முடிவடைந்து உள்ளது. இது குறித்து பாரீஸ் மேயரான Anne Hidalgo கூறுகையில், பூட்டுகளை அகற்றியதால், அந்த பகுதியின் அழகு மற்றும் சிறப்புக்கள் மறையாதவாறு அந்த இடத்தில் அழகிய ஓவியங்களை வரையும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தற்காலிகமாக அமைக்கப்படும் இந்த ஓவியங்கள், சில மாதங்களில் கண்ணாடி ஓவியங்களாக மாற்றப்பட்டு பொது மக்களின் பார்வைக்காக நிரந்தரமாக அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## வீடின்றி சாலையில் வசிப்பவருக்காக பணம் திரட்டும் மாணவி



வீடின்றி சாலையில் வசிக்கும் மனிதருக்காக மனித நேயமிக்க கல்லூரி மாணவிஒருவர்பணம்திரட்டும்முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஸ்கொட்லாந்தில் உள்ள டுண்டி பல்கலைக்கழகத்தில் பயின்று வருபவர் அன்னா லவ்டன் (Anna Loudon). காபி சொப் ஒன்றுக்கு செல்லும் போது அதன் வாசலில் லெஸ் கோர்டன் (Les Gordon) என்பவர் சாலையில் படுத்து இருப்பதை பார்த்தார். பின்னர் அவருக்கு காபி வங்கி தந்த அன்னா அவருடம் நட்பாக பழகி வந்தார்.

இந்நிலையில் கார் விபத்து ஒன்றில் சிக்கியதால் கோர்டனால் நடக்கமுடியாமல் போனதும் அதனால் அவர் கடந்த 9 மாதங்களாக சாலையில் வசித்துவருவதையும் அன்னா அறிந்தார். மேலும் அவர் கடுங்குளிரால் பாதிக்கபடுவதையும் அவருக்கு இதயத்தில் சிகிச்சை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் அறிந்தார். பின்னர் அவர் தங்குவதற்கு ஒரு வீட்டை ஏற்பாடு செய்வதற்காக பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் சாலையில் கோர்டனுடம் காபி அருந்துவது போன்ற புகைப்படத்தை அவரது நண்பர்கள் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றினர். இதனை பார்த்த நெட்டீசன்கள் அவருக்கு ஏராளமான நிதியை வழங்கியுள்ளனர். இதுவரை அவரிடம் 4,500 யூரோ சேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் இராணுவ எழுச்சி ஏற்படும் - ஜேர்மன்



உக்ரையின் உள்நாட்டு போரை கட்டுப்படுத்தாவிட்டால் மீண்டும் ராணுவ எழுச்சி ஏற்படக்கூடும் என்று ஜேர்மனி எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜேர்மனியின் பெர்லினில் உக்ரையின் விவகாரம் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் ஃப்ரான்க் வால்ட்டர் ஸ்டென்மெயர் (Frank Walter Steinmeier) பேசுகையில், உக்ரையினில் ராணுவத்துக்கும் ரஷ்ய கிளர்ச்சியாளர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள போரில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாகவும் கடந்த புதன் அன்று நடைபெற்ற தாக்குதலில் 24 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விவகாரத்தில் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர உடனே பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும், இல்லையென்றால் மீண்டும் ராணுவ எழுச்சி ஏற்பட வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில் உக்ரையின் நாட்டு வெளியுறவு அமைச்சர் பாவலோ கிலிம்கின் செய்தியாளர்களிடம் பேசுகையில், ரஷ்ய அதரவு படைகள் மின்ஸ்க் (Minsk) ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறியுள்ளனர் என்று குற்றம்சாட்டினார். மேலும் ரஷ்ய படையிடம் நவீன ஆயுதங்கள் மற்றும் டேங்கர்கள் போன்றவை உள்ளன. எனினும் நாங்கள் ஒரு அடி நிலத்தை கூட விட்டுத் தரவில்லை என்றும் கிலிம்கின் கூறியுள்ளார்.

## 14 ஆண்டுகளில் பலியான 1.5 லட்சம் உயிர்கள்



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் சண்டையில் 1 லட்சம் பேர் பலியாகி உள்ளதாக புதிய ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் தீவிரவாதம் குறித்தும், அதனால் நடைபெறும் சண்டையில் பலியானோர் குறித்தும் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக் கழகத்தின் வாட்சன் சர்வதேச கல்வி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது. அமெரிக்காவில் அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதலுக்கு பிறகு கடந்த 2001ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் சண்டையில் ஈடுபட்டன. அதில் பலர் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். இந்த நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் படைகளை படிப்படியாக வாபஸ் பெறுவதாக அமெரிக்கா அறிவித்தது. இருந்தும் ஆப்கானிஸ்தானில் சண்டை இன்னும் முடியவில்லை. தொடர் கதையாகவே உள்ளது. பாகிஸ்தான் தீவிரவாதிகளின் புகலிடமாகவும், சொர்க்கமாகவும் திகழ்கிறது. வடமேற்கு பாகிஸ்தானில் தலிபான்கள், அல்கொய்தா உள்ளிட்ட தீவிரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. வெடிகுண்டு தாக்குதல், ராணுவத்துடன் சண்டை என அங்கு வன்முறை தினமும் ஒரு வாடிக்கையாகி விட்டது.

வன்முறை சம்பவங்களால் ராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், உதவியாளர்கள் மற்றும் நேட்டோ படை வீரர்கள், வெளிநாட்டு உதவி குழுக்களை சேர்ந்தவர்கள் என பலர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்துள்ளனர். பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுடனான சண்டையில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் இதுவரை 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். அவர்களில் பொதுமக்களும், ராணுவ வீரர்களும் அடங்குவர். இவர்கள் தவிர 1 லட்சத்து 62 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் உடல் உறுப்புகளை இழந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.






பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## ஆண்மீனின் துணையின்றி குஞ்சு பொறிக்கும் அதிசய பெண் மீன்கள்



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் ஆண்மீனின் துணையின்றி தாமாகவே குஞ்சுபொறித்த வாள்மீன்களைக் (கோலா மீன்கள்) கண்டுபிடித்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்குமுன்பும் இப்படியான வித்தியாசமான குஞ்சுபொறிக்கும் முறையை மீன் தொட்டிகளில் அல்லது தனியாக சோதனைக்கூடங்களில் வளர்க்கப்படும் பெண் மீன்களிடம் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டிருந்தாலும், இயற்கை நீர் நிலைக ளில் இப்படியான மீன்குஞ்சுகளை அவர்கள் கண்டிருக்கவில்லை.

ஆங்கிலத்தில் Saw fish என்றும் தமிழில் வாள் சுறா, வாள் மீன், கோலா மீன் என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் மீன்வகையைச் சேர்ந்த ஏழு பெண் மீன்களை விஞ்ஞானிகள் பரிசோதித்தபோது, அவற்றுக்கு தந்தை மீன்கள் இருந்ததற்கான எந்த மரபணு சான்றுகளையும் அவர்கள் காணவில்லை.

இந்த ஏழு பெண் மீன்களுமே கருவுறாத பெண் மீன்களின் முட்டையில் இருந்து உருவான கருவில் இருந்து பிறந்த மீன்கள் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். Current Biology என்கிற விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகளின்படி, ஒரு உயிரினத்தின் எண்ணிக்கை வெகுவாக குறையும்போது இயற்கையாகவே இத்தகைய கருவுறா முட்டைகளே குஞ்சுகளைப் பொறிக்கும் நிகழ்வுகள் நடக்கக்கூடும் என்கிற சாத்தியத்தை குறிப்புணர்த்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 600 கோடி சொத்துக்களை துறந்து மதத் துறவியாக மாறிய கோடீஸ்வரர்



டெல்லியில் 600 கோடிக்கு அதிபதியான கோடீஸ்வரர் ஒருவர், தனது சொத்துக்கள் அனைத்தையும் துறந்து ஜைன மதத் துறவியாகியுள்ளார். டெல்லியில் உள்ள பிரபல பிளாஸ்டிக் வியாபாரியான பன்வர்லால் ரகுநாத் தோஷி. சுமார் ரூ.600 கோடிக்கு அதிபதியான இவருக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

தனது தந்தையிடம் ரூ.30 ஆயிரம் கடனாகப் பெற்று பிளாஸ்டிக் வர்த்தகத்தில் இறங்கிய இவர், போராட்டத்தை சந்தித்த போதிலும், அவரது வர்த்தக மதிப்பு உயர்ந்து. ரூ.600 கோடி யைத் தாண்டியுள்ளது. ஜைன மத பிரச்சாரங்களால், 1982ஆம் ஆண்டு முதன்முறையாக ஈர்க்கப்பட்ட அவர் ஜைன மதத்துறவியாக விரும்பினார்.

இதற்கு இவரது குடும்பத்தாரிடம் பலத்த எதிர்ப்பு இருந்த நிலையில், இவர் கடந்த ஆண்டு தனது குடும்பத்தை சமாதானப்படுத்தி துறவறத்துக்கு அனுமதி வாங்கியதுடன் அதனை ஒரு விழாவாக கொண்டாடியுள்ளார். இந்நிலையில், கடந்த சனிக்கிழமையன்று ஹவர்சி தான் எனும் ஜைன மத ஊர்வலம் நடைபெற்றது. சுமார் 7கி.மீ. தூரம் வரை நீண்ட இந்த ஊர்வலத்தில் ஆயிரம் ஜைன துறவிகள், 12 தேர்கள், 9 யானைகள், 9 ஒட்டக வண்டிகள் மற்றும் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதையடுத்து ஞாயிற்றுக்கிழமை அன்று, இவர் ஜைன மதத் தலைவர் ஸ்ரீ குணரத்ன சுரீஷ்வர்ஜி மகராஜின் கீழ் சீடராக தன்னை இணைத்துக்கொண்டார். அகமதாபாத் கல்வி மைதானத்தில் நடந்த இந்தவிழாவில், ஜைன மத அமைப்புகளுக்கு ரூ.25 கோடி மதிப்புள்ள நன்கொடைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியைக்காண சுமார் ஆயிரம் சாதுக்கள் தவிர, 1.5 லட்சம் மக்கள் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




"போதைப்பொருள் பாவனையற்ற இலங்கையை உருவாக்குவோம்" என்னும் தொனிப்பொருளில் 04-06-2015 அன்று போதைப்பொருள் பாவனைக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகம் மற்றும் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து வவுனியா மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள். தகவலும் படங்களும் :- இ.தர்சன்






















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.06.2015 அன்று வெளியிடப்பட்டது.